விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 24 ஞாயிற்றுக்கிழமை (10.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 295

### நல்லூர் கந்தசுவாமி கோவில் எஜமான்

# குமாரதாஸ் மாப்பாணர் கந்தன் கழலடி சேர்ந்தார்



(யாழ்ப்பாணம்)

**நல்லூர் கந்தசுவாமி கோவில் எஜமான் குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் நேற்று 09ஆம் திகதி கந்தப்பெருமானின் கழலடி சேர்ந்தார்.**

மாப்பாணர் குடும்பத்தின் பத்தாவது வாரிசாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில் நிர்வாகத்தின் எஜமானாராக இருந்து கடந்த 57 வருடங்கள் அவர் ஆற்றிய பெரும் பணியால் அவர் மீது பொதுமக்கள் அளவு கடந்த பக்தியும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

தன்னை வெளிப்படுத்தாமல் மிகவும் எளிமையாக, நல்லூர் முருகன் ஆலயத்தை நிர்வகித்த குமாரதாஸ் மாப்பாணரின் காலத்திலேயே சண்முகர்வாசல் இராஜ கோபுரம், குபேரவாசல் இராஜ கோபுரம், சண்முகர் விமான தங்கக் கலசம் உள்ளிட்ட பல் வேறு திருப்பணிகள் நடந்தேறின என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

நேற்றைய தினம் 19

எம்.பியின் பெயரைப் பயன்படுத்தி

## விதவைப் பெண்ணிடம் பணம் மோசடி

(கரணவாய்)

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு பணம் மோசடி செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று கரவெட்டி கரணவாய் தெற்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

கணவனை இழந்த விதைவை பெண்களின் ஒவ்வொரு பிள்ளைகளுக்கான 3 இலட்சம் ரூபாய் நிதி குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கு கிடைத்துள்ளதாகவும் அந்த நிதி தற்போது திரும்பவுள்ளதால் உடனடியாக 25 19

## இன, மத பாகுபாடு நல்லூரில் கண்டதில்லை

### மாப்பாணரின் மறைவுக்கு பிரதமர் மகிந்த இரங்கல்

(யாழ்ப்பாணம்)

இன, மத பாகுபாடு நல்லூரில் பாராட்டப்பட்டு யாரும் கண்டதில்லை என 19

### நாட்டை இருளை நோக்கி

# ராஜபக்ஷ அரசாங்கம் கொண்டு செல்கின்றது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டை இருளை நோக்கி கொண்டு செல்கின்றதேயன்றி வெளிச்சத்தை நோக்கி கொண்டு செல்லும் அடையாளத்தை காணமுடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமிக்கு வாயில் சூடு வைத்த தாய் பொலிஸாரால் கைது

### கிளிநொச்சியில் கொடூரம்



(கிளிநொச்சி)

அப்பளத்தினை உண்டதற்காக சிறுமியின் வாயில் சூடு வைத்த தாய் பொலிஸாரால் 19

# எரிவாயு, கோதுமை மா, பால்மா விலை உயர்வு; தேநீர் உட்பட உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கலாம்

(கொழும்பு)

எரிவாயு, கோதுமை மா, பால்மா ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ள நிலையில் தேநீர் உட்பட உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

கோதுமை மா, சமையல் எரிவாயு மற்றும் சீமெந்து ஆகியவற்றுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை 500 ரூபாயினாலும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 20 ரூபாயினாலும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகிறது.

சமையல் எரிவாயு, கோதுமை மா ஆகியவற்றின் விலை அதிகரிக்கப்பட்டால் பேக்கரி உற்பத்தி உணவு பொருட்களின் விலையை அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை பேக்கரி உணவு உற்பத்தியாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதால், வெதுப்பக 19

### இந்திய ரோலர் படகுகள்

## வடமராட்சியில் 15 மீனவர்களின் வலைகளை வெட்டி நாசமாக்கின

(கரணவாய்)

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய ரோலர் படகுகளினால் வடமராட்சி பகுதியைச் சேர்ந்த 15 உள்ளூர் மீனவர்களின் வலைகள் வெட்டி நாசமாக்கப்பட்டுள்ளன.

நேற்று சனிக்கிழமை அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒன்றரை கடல்மைலுக்கும் இரண் 19

### நாட்டில் மேலும்

## 29 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கோவிட்டால் மேலும் 29 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 18 ஆண்களும் 11 பெண்களும் உள்ளடங்குகின்றனர். (ம-3)

## கோப்பாயில் வீடு புகுந்து 10 பவுண் நகை கொள்ளை

### இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)


கோப்பாயில் நேற்று முன்தினம் பகலில் வீடு புகுந்து 10 பவுண் தங்க நகைகளைத் திருடிய இளைஞன் ஒருவர் நேற்று மாலை யாழ்ப்பாணம் நகரில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இணுவிலைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து திருடப்பட்ட நகைகளும் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார்

( நல்லூர் கந்தன் ஆலய அறங்காவலர் – நல்லூர் எஜமானர் )

அவர்கள் நல்லைக்கந்தன் கழலடி சேர்ந்த செய்தி அறிந்து துயரடைந்தோம். அன்னாரின் ஆத்மா நல்லைக் கந்தனின் கழலடியில் இளைப்பாற பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2792)

நடராஜா சத்தியரூபன்
நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபம்
கோவில் வீதி, நல்லூர்.


# மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (7567)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com



# மணமகள் தேவை

91, புனர்பூசம், 7 இல் செவ்வாய், B.A, B.Sc எஞ்சினியர் இந்து மணமகனிற்கு மணமகள் தேவை.
**துர்க்கா திருமண சேவை** (8205)

077 818 5978


# மரண அறிவித்தல்



## நாகமுத்து நாகராசா

வல்லை வீதி சங்கானையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட நாக முத்து நாகராசா கடந்த 04.10.2021 (திங்கட்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற நாக முத்து - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகன் - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சித்தம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சற்குணம் (பூரணி மில் - சங்கானை), நாகரத்தினம் மற்றும் தங்கராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஜெயபாஸ்கரன் (சுவிஸ்), ஜெயவாணி, ஜெயகனேசன் (சுவிஸ்), ஜெயகுமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜிதா (சுவிஸ்), சிவகுமார், யோகமதி (சுவிஸ்), வேணி ஆகியோரின் அன்பு மாமனாரும் அரவிந்தன், அபிராம், அபிராஜ், மாதினி, ராகவி, பார்கவி, கயூரன், நிதுசன், லக்சாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 04.10.2021 (திங்கட்கிழமை) அன்று மாலை 6.00 மணிக்கு நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8202)

பக்கஸ் லேன், மானிப்பாய்.
ஜெயகுமரன் (கீதன் - மகன்) - 077 414 6286
சிவகுமார் (மருமகன்) - 076 003 5956
தகவல்:- குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



நல்லைக்கந்தன் அறங்காவலர் - நல்லூர் எஜமானர்

## குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார்

அவர்கள் நல்லைக்கந்தன் திருவடிகளைச் சேர்ந்தார் எனும் செய்தி அறிந்து மீளாத்துயர் கொண்டோம். எஜமானரின் ஆத்மா அவன் திருவடிகளில் இளைப்பாற நல்லைக்கந்தப் பெருமானை இறைஞ்சி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2788)

மைதிலி ஜுவல்லறி
இல. 38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சந்தோஸ் ஜுவல்லறி
இல. 97A, 99V, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 – 09 – 1932



மறைவு 09 – 10 – 2021

திருமதி

## றெஜினா பிலோமினா தனசிங்கம்

புலோலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றெஜினா பிலோமினா தனசிங்கம் நேற்று (09.10.2021) சனிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு மரியாம்பிள்ளை - சிசிலியா மரியாம்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் திரு. தனசிங்கத்தின் (இளைப்பாறிய பொறியியலாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பீலிக்ஸ் ராஜன், பெனோ ராஜி கிங்ஸ்லி, அன்ரன் றாயு ஆகியோரின் பாசமிகு தாயாரும் திரு. பிரான்சிஸ் ராயேந்திரம், அருட்சகோதரி ஜசிந்தா (HC), பொனிபஸ் தேவராஜா, யுவக்கீன் புவிராஜா, சாள்ஸ், ஜெயராஜா, அருட்பணி அல்பேட் யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.10.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8201)

இல. 353/34, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைமிக்க சமய காவலரை சைவ உலகம் இழந்துவிட்டது

## கலாநிதி ஆறு. திருமுருகன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

ஆளுமைமிக்க சமய காவலரை சைவ உலகம் இழந்துவிட்டது என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோவில் அறங்காவலர் குகஶ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களின் பிரிவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர் கந்தப் பெருமானின் அறங்காவலராக கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அரும் பணி ஆற்றிய பெருமகன் ஶ்ரீமான் குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகிறேன். உலகமே வியக்கும் வண்ணம் நல்லைக் கந்தன் ஆலயத்தை சீரிய வழியில் ஆற்றுப்படுத்திய ஆளுமை மிக்க சமய காவலரை சைவ உலகம் இழந்துவிட்டது. எவ்வித ஆடம்பரமும் இன்றி பக்தரோடு பக்தராக நின்று ஆலயத்தைக் கட்டி வளர்த்த பெருந்தகையை இனி எங்கே காண்போம். தனது சகோதரன் அமரர் சண்முகதாஸ் மாப்பாண முதலியார் காலமான நாள் முதல் தனது உத்தியோக பதவி யாவற்றையும் துறந்து முழுநேரத் தொண்டராக தன் வாழ்வை அர்ப்பணித்த பெருமகன். எவருக்கும் அஞ்சாது தன் மகத்துவம் மிக்க ஆளுமையால் பல்வேறு திருப்பணிகளை நிறைவேற்றிய இப்பெருந்தகையின் சாதனைகளை சொல்லி முடிக்க முடியாது. நல்லூர் கந்தன் ஆலய ஒழுங்குகளை எவர் வருகைக்காகவும் மாற்றி அமைக்காது தெய்வ சந்நிதானத்தில் அனைவரும் ஒன்றே என்ற அற்புதக் குறிக்கோளை தனது இறுதி மூச்சு வரை காப்பாற்றியவர். கண்ணை இமை காப்பது போல் ஒவ்வொரு விநாடியும் ஆலய ஒழுங்குகளை அவதானித்து அரிய பணி ஆற்றிய இப் பெருந்தகையை நல்லூர் கந்தப் பெருமான் தனது திருவடிக்கு அழைத்துவிட்டார். என் செய்வோம், அவரது தூய பணியை நல்லூர் மரபுப்படி இளைய எஜமானார் தந்தையின் வழியில் நெறிப்படுத்த பிரார்த்திப்போம். எல்லாத் திருக்கோவிலிலும் நல்லூர் கந்தனின் சிறப்பை பின்பற்றவைக்க ஒப்பற்ற தலைமகனை அனைவரும் மீளநினைந்து பிரார்த்தித்து வழி அனுப்பிவைப்போம் என செஞ்சொற்செல்வர் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (ம-3)

# பண்பாட்டின் பெருங்கோவிலான நல்லூரைக் கட்டிக்காத்த பேராளுமை

## குமாரதாஸ் மாப்பாண முதலியாருக்கு பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

பண்பாட்டின் பெருங்கோவிலான நல்லூரைக் கட்டிக்காத்த பேராளுமை குமாரதாஸ் மாப்பாண முதலியார் என பேராசிரியர் சண்முகலிங்கன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நல்லூர்எஜமானர்குகஶ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் முருகன் திருவடி நிழலைச் சேர்ந்த செய்தி நெஞ்சிலே எழும் கனம் தாங்கமுடியாதது. நல்லூரின் 10 ஆவது அறங்காவலராக நல்லூரின் இன்றைய ஆன்மீக அழகின் மூலவராக அவராற்றிய பணிகளின் பெறுமதி எல்லையில்லாதது.

எளிமையான அவர் வாழ்வின் பக்குவம் எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை. அவரோடு பழகக் கிடைத்த பொழுதுகள் அர்த்தம் நிறைந்தவை. பண்பாட்டின் பெருங்கோவிலாக நல்லூரைக் கட்டிக்காத்த பேராளுமையாக என்றென்றும் அவர் மேலான நினைவுகள் காக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ம-3)

# யாழ்.மாநகர சபைக்கு இலவசமாக இடம் தந்தவர் குமாரதாஸ் மாப்பாண முதலியார்

## மாநகர முதல்வர் இரங்கல் செய்தி

(யாழ்ப்பாணம்)

மாநகர சபைக்கும் நல்லூர் உற்சவ காலத்திற்குமான தொடர்பு விபரிக்க வேண்டிய ஒன்றல்ல. அந்தவகையில் மாநகர சபைக்கும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கும் அதன் எஜமானர்களுக்குமான பந்தம் நீண்டது. ஆழமானது. அந்த வகையில் குமாரதாஸ் மாப்பாணரின் இழப்பு எமக்குப் பாரிய இழப்பு என யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குமாரதாஸ் மாப்பாண முதலியார் மிகச்சிறந்த பண்பாளர் எல்லாவற்றுக்கும் மேலாக ஆடம்பரமோ பந்தாவோ அற்ற எளிமையின் வடிவமான மிகச் சிறந்த மனிதர். அவர் மிகச் சிறந்த நிர்வாகி. அவர் எம்மை விட்டுப் பிரிந்த போதும் அவருக்கு நிகரான அல்லது ஒருபடி மேலான தனதுபுதல்வனை எமக்குத் தந்திருக்கின்றார். இன்று யாழ். மாநகர சபை தற்காலிகமாக இயங்குகின்ற இடம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கு உரித்தான இடம். யுத்தத்தினாலே நகரிலிருந்த மாநகர சபைக் கட்டடம் இடிந்து அழிந்த போது அதனைத் தற்காலிகமாக இயக்க ஓர் இடம் தேவைப்பட்டது. அவ் இடத்தினை இலவசமாக மாநகர சபைக்கு தந்துதவியவர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரே ஆவார் எனத் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## விலை மனுக்கோரல்

எமது நிறுவனத்தில் கீழ்வரும் இரு வேலைகளுக்குப் பொருத்தமான ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

1. **சைவ வித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்லத்தின் (பெண்கள்) விடுதியில் நடைபாதைகளுக்கான அலங்காரக் கல் பதிக்கும் வேலை.**

2. **சைவ வித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்லத்தின் (ஆண்கள்) விடுதியில் பாவனையற்று காணப்படும் 60' x 20' கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்தல்.**

மேற்படி வேலைகள் தொடர்கான விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் பெற்று எதிர்வரும் 17.10.2021 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

(C-2787)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி
தொலைபேசி இல : 0212226525

லோ.துஷிகரன்,
செயலாளர்



## உடனடி வேலை வாய்ப்பு

வெளிநாட்டில் இருந்து ஆடைகள் இறக்குமதி செய்யும் நிறுவனத்திற்கு ஆடைகளைப் பிரித்து சரிபார்த்து மீண்டும் பொருட்களைப் பொதி செய்து கடைகளுக்கு விநியோகிக்கும் யாழ். நகரில் உள்ள நிறுவனத்திற்கு

**மேலாளர் (SUPERVISOR)**

**ஆடைகளை பொதியிடல்**

**வேலைக்கு பெண்கள் தேவை.**

கல்வித் தகைமை :- க.பொ.த. உயர்தரம் (A/L),
க.பொ.த. சாதாரண தரம் (O/L)

படித்த பெண்கள் ஒரு வாரத்திற்குள் விண்ணப்பிக்கவும்.
திறமை அடிப்படையில் ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
074 099 1852



## மணிவிழா வாழ்த்து

10.10.2021

திருமதி. இராஜசிங்கம் கமலாம்பிகை



**வாழ்த்துக்கவி**

உங்கள் உருவத்தில்
ஆளுமை தெரியும்,
சேவையில் அனுபவம்
கம்பீரநடைபோடும்,
அறிவில் அடக்கமும்
அன்பும் ததும்பும்,
ஆலோசனைகள்
நிழலாகிக் கண்டிக்கும்,
மாணவரை அணுகுவதில்
பண்பொடுபாசமும் புரியும்.
இப்பத்தாம் மாதத்தில்
இத்தனையையும் இழக்கிறாள்
மகாவித்தியாலயமாம்
எம்கல்லூரித்தாய்.
அத்தனையையும்
தொலைத்தபின்னும்
உம் மணிவிழாநன்னாளில்
பல்லாண்டு
வாழ்கவாழ்கவென
நல்வாழ்த்து நாம் நவின்று
வாழ்த்துகின்றோம்.

(C-2786)

Best Wishes

**சேவைக்காலம்**

| | |
|---|---|
| மு/முல்லைத்தீவு முஸ்லிம் வித்தியாலயம்- | 15.04.1985 - 19.08.1989 |
| கிளி/பூநகரி மகாவித்தியாலயம்- | 20.08.1989 -08.06.1992 |
| கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்- | 09.06.1992- 05.09.1997 |
| [illegible] | 06.09.1997 - 05.02.2001 |
| கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்- | 06.02.2001 - 31.12.2013 |
| கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்- (தரம் 10 -வகுதித்தலைவர்) | 02.01.2014 - 09.10.2021 |

நாட்டின் வேர்களை உருவாக்கும்
அறப்பணியான தனது ஆசிரியப்
பணியை சிறப்புற ஆற்றிய
ஆசிரியருக்கு இம்மணிவிழா
நாளில் ஓய்வுக்காலம்
மகிழ்ச்சிகரமாய் அமைய
மனம் திறந்து வாழ்த்துவதில்
நிறைவடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் ஊழியர் நலன்புரிச்சங்கம்,
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளே ஓப் சுற்றுக்குள்

- டெல்லி கப்பிட்டல்ஸ்
- சென்னை சுப்பர் கிங்ஸ்
- றோயல்ஸ் சலஞ்சர்ஸ் பெங்களூர்
- கொல்கத்தா நைட் ரைடர்ஸ்




14 ஆவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் போட்டியின் 2 ஆவது கட்ட ஆட்டங்கள் ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள டுபாய், அபுதாபி, ஷார்ஜாவில் நடைபெற்றது. கடந்த மாதம் 19 ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டியின் லீக் ஆட்டங்கள் நேற்று முன் தினத்துடன் முடிந்தன.

பிளே ஓப் சுற்றில் நுழையும் 4 ஆவது அணிக்கான போட்டியில் கொல்கத்தா மற்றும் மும்பை அணிகள் மட்டுமே இருந்தன. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 14 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்தில் இருக்கிறது. அந்த அணியின் நிகர ரன்ரேட் 0.587 ஆக உள்ளது. எனவே கொல்கத்தா அணிக்கே பிளே ஓப் சுற்று வாய்ப்பு அதிகமாக இருந்தது.

எனவே, நிகர ரன்ரேட் அடிப்படையில் கொல்கத்தா அணி பிளே ஓப் சுற்றுக்குள் 4 ஆவது அணியாக நுழைந்தது.(4-6)



# இறுதிக்குள் நுழையப்போவது யார்?

புள்ளிப்பட்டியலில் முதல் 2 இடங்களைப் பிடித்த டெல்லி கப்பிட்டல்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் இன்று நடைபெறும் முதல் தகுதிச்சுற்றில் மோதுகின்றன.

14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா நேற்று முன்தினத்துடன் முடிந்ததுடன் லீக் சுற்று நிறைவடைந்தது. லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடித்த டெல்லி கப்பிட்டல்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ், பெங்களூர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகிய அணிகள் இறுதிப் போட்டிக்கு முந்தைய பிளே ஓப் சுற்றுக்கு முன்னேறியது.

இன்று டுபாயில் இரவு 7.30 மணிக்கு நடக்கும் இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதிச்சுற்றில் புள்ளிப் பட்டியலில் முதல் 2 இடங்களைப் பிடித்த டெல்லி கப்பிட்டல்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் கோதாவில் குதிக்கின்றன. இதில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்குள் நுழையும். தோல்வி அடையும் அணிக்கு இன்னொரு வாய்ப்பு வழங்கப்படும்.

நாளை சார்ஜாவில் நடக்கும் வெளியேற்றுதல் சுற்றில் புள்ளிப்பட்டியலில் 3 ஆவது மற்றும் 4 ஆவது இடங்களைப் பெற்ற பெங்களூர், கொல்கத்தா அணிகள் சந்திக்கின்றன.

இதில் தோற்கும் அணி தொடரில் இருந்து வெளியேறும். வெற்றி பெறும் அணி இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதிச்சுற்றில் தோல்வி அடையும் அணியுடன் இரண்டாவது தகுதிச் சுற்றில் 13 ஆம் திகதி மோதும். இறுதிப்போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி டுபாயில் நடைபெறுகிறது. (4-6)

# மரண அறிவித்தல்

### திருமதி
## இராஜேஸ்வரி செல்லத்துரை

**தோற்றம் : 05.08.1937 மறைவு : 09.10.2021**



அச்சுவேலி தெற்கு நாவலம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை நேற்று (09.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் (வீரகேசரி செல்லத்துரை- மூத்த பத்திரிகையாளரும் வீரகேசரி யாழ். நிருபரும்) அன்பு மனைவியும் வைகுந்தநாதன் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/புனித பத்திரிசியார் கல்லூரி), இரகுபதி (ஜேர்மனி) மற்றும் காலஞ்சென்றவர்களான பரந்தாமன் (இலங்கை பொலிஸ் - ஓய்வுநிலை உத்தியோகத்தர்), செல்வநாயகம், சரோஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராணி, செல்வச்சந்திரன் (ஓய்வுநிலை கிராம சேவையாளர், வலி.கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய்), மணிமேகலை (ஓய்வுநிலை உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சுலோசனா, இரவிச்சந்திரன் (நெதர்லாந்து), ஞானச்சந்திரன் (உப தபாலகம், புத்தூர்), உமாராணி (முன்னாள் உதவி ஆசிரியர் - வலம்புரி), ஜமுனாராணி (ஆசிரியர் - வ/வவுனியா விபுலானந்தா கல்லூரி), யாழினி மற்றும் காலஞ்சென்ற ஜெயச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷ்ணமூர்த்தி (பிரான்ஸ்), புஷ்பவதி, பரஞ்சோதி (ஆசிரியர் - யா/ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்), யோகராசா, ஸ்ரீமதி (ஆசிரியர் - யாழ். மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்), பிரேமச்சந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை), செந்தில்பாலன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - நகர சபை, வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் துளசிகா, வேந்தன், ஜனகன், பிரியங்கா, சந்திரமௌலீசன், புஷ்கரணி, சேயோன், நியந்தரி ஆகியோரின் பேர்த்தியும் சுபாணன், கரிஷ்ணன், சுபஹரி ஆகியோரின் பூட்டியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.10.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அச்சுவேலி தெற்கு, நாவலம்பதியிலுள்ள அன்னாரது “வீரகேசரி” இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

“வீரகேசரி” நாவலம்பதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

சி. செல்வச்சந்திரன் - 076 593 4124
அ. வேந்தன் - 077 669 6078

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

10.10.2021
புரட்டாதி 24, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 9.13 மணிவரை
அனுசம் முன்னிரவு 7.34 மணிவரை
சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகு காலம் -4.32-6.02 மணிவரை
சந்திராஷ்டமம்- அச்சுவினி, பரணி

வளவன்


மேஷம்

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், விரயங்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.


ரிஷபம்

நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மிதுனம்

வியாபார விருத்தியுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்,பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள்.


கடகம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் பகை மாறும்.


சிம்மம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும் புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


துலாம்

பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், புதிய பாதை புலப்படும் நாள், ஆசைகள் பூர்த்தியாகும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.


விருச்சிகம்

வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை மாறும்,கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.


தனுசு

வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது,உடல் நலனில் கவனம் தேவை, பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.


மகரம்

வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், இலாபகரமான நாள்.


கும்பம்

என்றோ நடக்குமென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.


மீனம்

திறமை மிக்கவர்களின் ஒத்துழை-ப்பு கிடைக்கும், மனக் குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

அடுத்து இருப்போரை இகழ்தல் மதி கெட்டோரின் செயல்.

## இலங்கை வரும் இந்திய இராணுவத் தளபதி

(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதியும் படைப்பிரதானியுமான ஜெனரல் மனோஜ் முகுந்த் நாராவன இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் படைப் பிரதானி ஆகியோரது அழைப்பிலேயே அவர் நாளை மறுதினம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். (நி-5)


## கடை வாடகைக்கு

மானிப்பாய் வீதியில் பெரிய பள்ளிவாசல் அருகாமையில் கடை வாடகைக்கு.

நீளம் - 37 அடி
அகலம் -20 அடி

தொடர்பு- 077 617 6413

(8192)

UNOPS

வெற்றிட அறிவித்தல்கள்

பதவி வகை : நிதியியல் உதவியாளர்
ஒப்பந்த வகை : தனிநபர் ஒப்பந்தகாரர் ஒப்பந்தம் (ICA), உள்ளூர், (LICA 6)
கடமை இடம் : முல்லைத்தீவு, இலங்கை
இறுதி திகதி : 2021 ஒக்டோபர் 20

மேலதிக தகவல்கள் மற்றும் விண்ணப்பித்தலுக்கு UNOPS Jobs இற்கு பிரவேசியுங்கள்
(https://jobs.unops.org/Pages/ViewVacancy/VADetails.aspx?id=22676)

மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் 0112665146/ prabuddhik@unops.org ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

தகுதியான பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்

விண்ணப்பங்கள் UNOPS Jobs இணையத்தளத்தின் ஊடாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(சி-1495)

# ST.JOHN'S COLLEGE, JAFFNA

## VACANCY
## COMPUTER HARDWARE TECHNICIAN

Application are here by invited from qualified persons for the above post.
Minimum Qualification : NVQ level-4 or equivalent.
Technical skills in electrical work would be considered an added advantage.
please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 18 th October 2021 to the address below:

The Principal
St.John's College
Jaffna

(C-2780)

# கேட்பது குறைவா

லொக்டவுண் காலத்தில் உங்கள் கேட்கும் திறனில் குறைவு இருப்பதாக உணர்ந்தீர்களா?

அப்படியென்றால் இன்றே விஷன் கெயாருக்கு வாருங்கள்

இலவச கேட்டல் புலன் பரிசோதனையுடன் செவிப்புலன் கருவிகளுக்கு 20% வரையான விலைக்கழிவு

இந்த அதிவிசேட சலுகை ஒக்டோபர் 10 முதல் 30 வரை மட்டுமே




VISION CARE HEARING SOLUTIONS

விஷன் கெயா ஒப்டிகல் சேவிஸஸ் (வரை) தனியார் நிறுவனம்.
பிரதான கிளை ; கொழும்பு ஏனைய கிளைகள் : யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், கொழும்பு - றேஸ்கோஸ், பாணந்துறை, கம்பஹா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மன்னார், தம்புள்ளை, அனுராதபுரம், கேகாலை, காலி, மாத்தறை, களுத்துறை, மகரகம, மாலபே, நீர்கொழும்பு, குளியாப்பிட்டி, ரத்தினபுரி, பண்டாரவளை, மொனராகலை, பதுளை, பொலன்னறுவை

(சி-1496)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைக்கு வைத்த தீயால் பயன்தரு மரங்கள் நாசம்

## மின் வயர்களும் சேதம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி-பெருங்குளம் பகுதியில் வீதியோரம் குப்பைக்கு வைத்த தீ பரவியதில் அருகில் இருந்த பசும் மரங்கள் தீப்பற்றி எரிந்து கருகியுள்ளன.

தீ மேலும் பரவி மின் வயர்களில் தீ பிடித்து பாரிய அனர்த்தம் ஏற்படவிருந்த நிலையில் சாவகச்சேரி நகரசபையின் முயற்சியில் இலங்கை மின்சார சபையினர் மற்றும் ஊர்மக்கள் இணைந்து தீப் பரவலைக் கட்டுப்படுத்தி பாரிய அனர்த்தைத் தவிர்த்தனர். (4-7-30)

# வங்கிகளில் கடனை பெற்றே தொழிலில் ஈடுபடுகின்றோம்

## வடமராட்சி கிழக்கு மீனவர்கள் ஆதங்கம்

(கரணவாய்)

**வங்கிகளில் கடனைப் பெற்று வலைகளை வாங்கி தொழில் செய்கிறோம். வலைகளை வெட்டி அழிக்கும் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்ப டுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**



வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் அத்து மீறலால் பல நூற்றுக் கணக்கான மீனவர்களது வலைகள் அறுத்து அழிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஆராய்வதற்காக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வடமாகாண மீனவர்களின் இணையம் ஆகியன இணைந்து பாதிக்கப்பட்ட மீனவர்களை நேற்று முன்தினம் நேரில் சென்று கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

இதன் போது இந்திய இழுவைப் படகினால் வெட்டி அழிக்கப்பட்டு மீளவும் பயன்படுத்த முடியாத வலைகளையும் பார்வையிட்டனர்.

வடமாட்சி கிழக்கு மீனவர்கள் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போது இந்திய இழுவைப் படகுகள் கரையில் இருந்து சுமார் 100 தொடக்கம் 300 மீற்றர் வரையான பகுதிக்கு வந்து எமது வலைகளை அறுத்து நாசம் செய்கின்றன. வெளிச்சம் போடாமல் இருட்டில் வந்து இழுவைமடித் தொழிலை மேற்கொள்கின்றனர். இதனால் எமது வாழ்வாதாரம் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் எமது படகினை கடலில் இறக்க முடியாத நிலையில் மேலே ஏற்றி விட்டுள்ளோம். வங்கிகளில் கடனைப் பெற்று வலைகளை வாங்கி தொழில் செய்கிறோம். வலைகளை வெட்டி அழிக்கும் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவறினால் விபரீதமான முடிவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இச் சந்திப்பின் போது தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் மற்றும் வடக்கு மீனவர்களின் இணையத் தலைவர் வி.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-7-60)

# இரசாயன உரம் பகிர்ந்தளிப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம்-புத்தூர்ச்சந்தி கமநல சேவை நிலையக் களஞ்சியசாலையில் இருப்பில் காணப்பட்ட இரசாயன உரங்கள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதன்போது ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு யூரியா உள்ளிட்ட இரசாயன உரங்கள் ஒருவருக்கு 25 கிலோ வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டது.இரசாயன உரம் இன்றி விவசாயம் மேற் கொள்வது சிரமம் என்ற மனநிலையில் இருந்த விவசாயிகளுக்கு இது பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. (4-7-30)

# குரங்குத் தொல்லையைக்கட்டுப்படுத்த தென்மராட்சியில் விசேட நடவடிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் குரங்கினைக் கட்டுப்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த அரசாங்கத்தின் கிராமத்திற்கான நிதி ஒதுக்கீடு வேலைத் திட்டத்தில் பெருமளவான நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

தென்மராட்சி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நீண்ட காலமாக குரங்கினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி வரும் நிலையில் குறித்த திட்டத்தில் குரங்கினைக் கட்டுப்படுத்த முக்கிய கவனம் செலுத்தப்பட் டுள்ளது.

குறித்த நிதியில் கமநல திணைக்களம் ஊடாக வாயுத் துப்பாக்கியைக் கமக்கார அமைப்புகளுக்கு வழங்கி குரங்கினை விரட்ட நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இருப்பினும் சில கிராம மக்கள் வாயுத் துப்பாக்கி குரங்கினை கட்டுப்படுத்த முழுமையாக பயனளிக்காது எனவும், அல்ரா சொனிக் எனும் கருவி ஊடாக குரங்கினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தனர்.

அல்ரா சொனிக் எனும் கருவி பொருத்துவதற்கு இது வரை அங்கீகாரம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படும் நிலையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் சில இடங்களில் அல்ரா சொனிக் கருவி பொருத்தி பரீட்சித்துப் பார்த்ததில் அது நூறு சதவீதம் குரங்கினைக் கட்டுப்படுத்தியதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

கிராமத்திற்கான ஒதுக்கீட்டில் தென்மராட்சி பிரதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட 180 இலட்சம் ரூபாவில் சுமார் ஒரு கோடி ரூபாய் குரங்குக் கட்டுப்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7-30)




வட்டுக்கோட்டை இலங்கை வங்கியில் 18+ சேமிப்பு கணக்கினை பேணிய வாடிக்கையாளர் ஒருவருக்கு அவரது திருமணப் பரிசாக தங்க நாணயம் ஒன்று கிளை முகாமையாளர் ப. செல்வகுமாரால் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

# கோவில் உண்டியல் உடைப்பு சந்தேக நபர்களுக்கு வலைவீச்சு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - பறளாய் பகுதியில் அமைந்துள்ள முருகன் கோவிலின் உண்டியல் உடைத்து, அதனுள் இருந்த பணம் களவாடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு முகமூடிகள், கையுறைகள் அணிந்த அறுவர் ஆலயத்திற்குள் நுழைந்து அங்கு நின்ற காவலாளியை தாக்கிவிட்டு பணத்தினை களவாடிச் சென்றனர். இந்தநிலையில் நேற்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் இதுதொடர்பாக முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை வட்டுக்கோட்டை பொலிஸார் தேடி வருகின்றனர். (4-7-104)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு சுழிபுரம் தபாலகத்தில் நேற்று மரம் நடுகை நிகழ்வு இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்களின் மணிவிழா சிறப்புமலர்



## உயர்திரு பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அமைதியும் பண்பும் நிறைந்த, அதிர்ந்து கதைக்கத் தெரியாத திருவாளர் கிருஸ்ணயோகன் அவர்களின் மணிவிழா நிகழ்வில் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். ஆரம்பப் பிரிவு முகிழ்நிலை ஆசிரியர்களின் பொறுப்பாளர். அப்பதவியிலிருந்து ஆசிரிய மாணவர்களின் பூரணத்துவமான ஆசிரியர் கல்வியில் பெறவேண்டிய, ஒழுக்கம் விழுமியம், கல்வி சார்ந்த மற்றும் இணைப்பாடவிதானம் சார்ந்த சகல பயிற்சிகளையும் அவர்கள் அடைதற்கு வழிசமைத்து ஓர் தனித்துவமான முத்திரையை பதித்து நிற்பவர்.

இப்புவிக்கு கல்வி வல்லுநர்கள் பலரையீந்த வடமராட்சி மண்ணின் மைந்தனாகிய இவர் தனது அறிவு முதிர்ச்சியினால் ஏற்பட்ட மௌனப் புன்னகையினால் முரண்பாடுகளற்ற பண்பாட்டுக் கோலமொன்றினை வெளிப்படுத்தியவர். இவரின் மௌனம் பேசும். தனது கல்விப்பணி மட்டுமன்றி கல்வியியற் கல்லூரியின் சகல செயற்பாடுகளிலும் தவறாமல் பங்கேற்பவர்.

கனக்கக் கதைக்காமல் காரியம் சாதிக்க வல்லவர்கள் உலகில் உண்டு என்பதற்கு இவரே முதல் எடுத்துக்காட்டு. ஆரம்பப் பிரிவுக்குரிய மன்றங்களின் பொறுப்பாளர் என்ற வகையில் சிறுவர் தின நிகழ்வுகளிலும் முதியோர் தின நிக்ழ்வுகளிலும் பல வகையான முன்மாதிரியான செயற்பாடுகளை மேற்கொண்டு ஆசிரிய மாணவர்களுக்கு வழிகாட்டியாக செயற்பட்டமை அனைவரும் அறிந்ததே. கோப்பாய் பிரதேசம் எமது கல்வியியற் கல்லூரியின் சமூகத்தினைக் கொண்டுள்ளது. எனவே அப் பிரதேசத்தில் வசிக்கும் முதியோர்களை கௌரவப்படுத்தும் வகையில் நாம் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவு தந்து செயற்படுத்தியவர். அதே போன்று சிறுவர் கௌரவிப்பிலும் கூட தோள் கொடுத்து நின்றவர்.

தலைமைத்துவம் என்பது ஆளுக்காள் வேறுபடும் இயல்புடையது. ஒருவரின் நடை, உடை, பாவனை, சொல், செயல், சிந்தனை என்பன பிறரில் செலுத்தும் செல்வாக்கு அவருடைய தலைமைத்துவத்தினை மற்றவரில் அவரறியாமலேயே பிரயோகம் செய்து, செல்வாக்கினை ஏற்படுத்தி அவர்களையும் ஆட்கொண்டு விடுகின்றது. அவ்வாறே கிருஸ்ணயோகன் அவர்கள் மாணவ ஆசிரியர்களிலும் பலரில் முன்மாதிரி நடத்தைகளினை ஏற்படுத்தியிருக்கும் என்பது வெளிப்படையுண்மையாகும்.

தாய் நிலம், தகப்பன் விதை, குரு பசளை என்பார்கள். ஆம், அந்தவகையில் இடம் சார் பெற்றோர் (Loco parents) என்ற நிலையினை முகிழ்நிலை ஆசிரிய மாணவர் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கில் வெளிக்காட்டுமாறு மனப்பதிவினை ஏற்படுத்திய திரு.கி. கிருஸ்ணயோகன் அவர்கள் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் இவரின் இத்தகைய பணிகளுக்கு உறுதுணையாக இருந்த அவரின் துணைவி மற்றும் பிள்ளைகள் அனைவரும் மகிழ்வான எதிர்காலம் அமையவும் இறைவனை வேண்டி அமைகின்றேன்.

**சுப்பிரமணியம் பரமானந்தம்.**
**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி(நிதி நிர்வாகம்) திரு.தி.ஜெயகாண்டீபன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிறந்த நிபுணத்துவத்துடன் கூடிய பண்பாளன். மிகவும் அமைதியாக தன்னுடைய பணிகளை மிகச்சரியாக ஆற்றவேண்டும் என்பதில் முனைப்புடன் தொழிற்படும் ஓர் ஆளுமை.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓர் அங்கத்தவர் ஆக முன்னரே திரு.கி.கிருஸ்ணயோகன் சேர் அவர்களுடன் பழக்கம் உண்டு. நீண்டகாலமாக தேசிய கல்வியியற் கல்லூரிகளின் மதிப்பீட்டுப் பணிகளில் அவருடன் சேர்ந்து பணியாற்றிய சந்தர்ப்பங்கள் மிக இனிமையானவை. அளவீடும் மதிப்பீடும், கணிதம் போன்ற பாடங்களில் அவரது பாடநிபுணத்துவத்தைக் கண்டு பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் அவரை உயர் பணிகளில் அமர்த்தியிருப்பதை நான் கண்டிருக்கின்றேன். மிகவும் பொறுப்புடன் நிதானமான எப்பொழுதும் மாணவர்கள் பால் சிந்தித்து அப்பணிகளை ஆற்றும் தன்மை தனித்துவமானது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இவ்வாறான தன்னலமற்ற சேவையாளர்களின் அனுசரணை தொடர்ந்தும் தேவை. அவர் இன்று ஓய்வு பெற்றாலும் அவரது பணிகள் தொடரும் என்பது எனது நம்பிக்கை.

**தி.ஜெயகாண்டீபன்**
**உபபீடாதிபதி ( நிதி நிர்வாகம்)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்) செல்வி.செல்வமலர் செல்வராஜா அவர்களின் வாழ்த்துச்செய்தி

எளிமைத் தோற்றத்தில் அமைதியின் வடிவமாய் கருமமே கண்ணாக கல்லூரிக்காய் உழைத்த மணிவிழா நாயகன் கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்கள் ஆரம்ப கணிதத்தின் அடிப்படை எண்ணக்கருக்களை எளிமையாகவும் இலகுபடுத்தியும் கற்பிப்பதில் வல்லவர். புள்ளிவிபரவியலை எந்தத் துறையினருக்கும் இலகுவாக புரியவைக்கக் கூடியவர். தம் பேச்சில் எப்போதும் நிதானத்தைக் கடைப்பிடிக்கும் பண்பாளர். தன்னடக்கம் மிக்கவர். தனது கற்பித்தல் உத்திகளினால் அனைத்து மாணவ ஆசிரியர்களினதும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். சக கல்வியியலாளர்களுடன் மிகச் சிறந்த உறவினைப் பேணி அனைவரது மதிப்பினையும் பெற்றவர்.

இத்தகைய பண்பாளர் திரு. கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்கள் தமது அறுபதாவது அகவையில் மணிவிழா மூலம் கௌரவிக்கப்படுவது சாலப் பொருந்துவதாகும். இவர்தம் ஓய்வுநிலை வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று நிறைவான வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி அவரை வாழ்த்துகிறேன்.

**செல்வி. செல்வமலர் செல்வராஜா,**
**உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**



## Mr. Krishnapillai Krishnayogan

**Senior Lecturer**
**Mathemathics (Special Trained),**
**B.Sc.,P.G.D.E., M.Ed.**
**Sri Lanka Teacher Educators' Service - Jaffna National College of Education.**

### Service Particulars

Ku/Mummana Muslim Maha Vidyalayam
01.02.1984 – 31.12.1985
Palaly Teachers' Training College
01.01.1986 - 31.12.1987
Ku/Mummana Muslim Maha Vidyalayam
01.01.1988 – 08.05.1994
J/ Nelliady Madhya Maha Vidyalayam
09.05.1994 -18.03.2002
Jaffna National College of Education
19.03.2002 – 10.10.2021



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முன்னாள் பீடாதிபதி திரு.எஸ்.கே. யோகநாதன் அவர்களின் வாழ்த்துச்செய்தி

ஓய்வு பெறும் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.கி. கிருஸ்ணயோகன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.கி.கிருஸ்ணயோகன் அவர்கள் மிகச்சிறந்த முன்மாதிரியான கல்வியியலாளர். நேர்மை, பொறுமை, இன்முகம் கொண்ட நல்லாசான். மனிதாபிமான அடிப்படையில் முகிழ்நிலை ஆசிரியர்களுடன் முரண்படாமல் மிகச்சிறப்பாகக் கற்பித்து வழிகாட்டும் ஆளுமையுடையவர். ஆதலினால் அனைத்துப் பிள்ளைகளும் அவரிடம் கற்க விரும்புவார்கள்.

கடினம் என நினைக்கும் கணிதபாடத்தை ஆரம்ப கல்வித் துறையினருக்கு மிக இலாவகரமாக சுகமான பாடமாகக் கற்பிக்கும் ஆற்றல் மற்றும் அழகியல்துறை மாணவர்களுக்கு கடினமான கல்வி அளவீடும் மதிப்பீடுப் பாடத்தை சிறப்பாகக் கற்பிக்கும் ஆற்றலை போற்றுகின்றேன்.

நான் பீடாதிபதியாக இருந்த காலத்தில் நிர்வாகத்திற்கும் சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய நல்ல மனிதர். சக கல்வியியலாளர்களுடன் சிறந்த தொடர்பாடல் கொண்டு உதவும் மனப்பாங்கு கொண்டவர். அவர் ஓய்வுபெறுவது கல்லூரிக்குப் பேரிழப்பாகும்.

ஓய்வுக்காலத்திலும் மிக மகிழ்ச்சியான நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன். அவருடைய நல்ல மனம்போல் பிள்ளைகள் சிறப்பாக உயர்கல்வியை பெற்றுள்ளனர். எல்லாம்வல்ல வித்தக விநாயகனின் அருளாசி கிடைப்பதாக.

**எஸ்.கே.யோகநாதன்.**



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் கழகத் தலைவர் கலாநிதி. பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

மெய்யான நல்லாசிரியராய் வாழ்ந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்ற உலகின் எல்லோர் உள்ளத்திலும் இடம்பிடித்தவர் மணிவிழா நாயகன் சிரேஷ்ட கல்வியியாளர் கல்விசார்ந்த முகிழ்நிலை ஆசிரியர்கள் சார்ந்த கல்லூரி அபிவிருத்தி சார்ந்த ஒவ்வொரு விடயங்களிலும் நல்லாசிரியராக திரு.கிருஸ்ணயோகன் சேர் துலங்கும் விதம் எமக்கெல்லாம் வழிகாட்டல்களாக அமையும்.

முகிழ்நிலை ஆசிரியர்கள் விரும்பும் கல்வியியலாளர், சக கல்வியியலாளர் விரும்பும் நண்பர், பீடாதிபதிகள் விரும்பும் நல்ல செயற்பாட்டு வீரனாக, கல்விசாரா ஊழியர்கள் விரும்பும் நற்பண்பு நிறைந்த மனிதர். நல்லாசிரியர்களை உருவாக்கும் எமது கல்லூரியில் ஒரு நல்லாசிரியர் நடத்தைகளை நடந்து காட்டிய பெருமகன் திரு.கி.கிருஸ்ணயோகன் அவர்கள் மாணவர்கள் சார்பாகவே போராடுவார். அதுதான் கல்வியின் பேறு. மாணவர்களிடையே கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை அன்பு நெறியால் உருவாக்கிய இப்பேராசிரியருக்கு எனது மணிவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் அவரும் அவர்தம் குடும்பமும் மகிழ்ச்சியான வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

**கல்வியியலாளர் கழகம் சார்பில்**
**கலாநிதி பா.தனபாலன் (தலைவர்)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**ஆசிரிய கல்வியியலாளர் கழகம்.**



## Message from the Chief Commissioner (Teacher Education)

It is very delightful to send this message of facilitation to Mr. Krishnapillai Krishnayogan, on his retirement from his 20 years dedicated service as a lecturer at Jaffna National College of Education.

Mr.K. Krishnayogan has been contributing a lot in producing competent teachers through his sincere work which created a strong reputation among the student teachers. He has a positive attitude in extending his service in management activities also. His institutional personality has made it possible to run the institution efficiently.

Though he has maintained good rapport with the students, he has been stern in maintaining discipline adhered the code of ethics. He always concerns the perfection of his professional and social roles which are highly appreciated by his colleagues and students.

I would like to express my congratulations for his yeoman services to the development of education.

I wish him a long life with peace and prosperity in his retired period.

**E.M.S.Eakkanayake,**
**Chief Commissioner,**
**Teacher Education.**



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முதலாவது உபபீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

திரு. கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்களின் மணிவிழா நாளில் அவர் தம் எதிர்காலம் சிறப்புடன் விளங்கிட வித்தக விநாயகரை பிரார்த்தித்து மகிழ்கின்றேன்.

திரு.கிருஸ்ணயோகன் அவர்கள் ஆரோக்கிய சிந்தனையுடனான இனிமையான மனிதர். உரையாடலில் நிதானம், கற்பித்தற் செயற்பாடுகளில் உளப்பூர்வமான ஆற்றுகை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மீது அளவிலாப் பற்றுறுதி என பல்வகை ஆளுமை நிறைந்தவர். அதிகம் பேசமாட்டார். மாணவர்களுடனும் சகபாடிகளுடனும் இன்னும் உயர் நிர்வாகிகளுடனும் உரையாடும் சந்தர்ப்பங்களில் அவ் உரையாடலில் உயர் விழுமிய உணர்வுகள் கலந்து மகிழ்ச்சி தரும்.

இத்தகு உயர் பண்புகள் நிறைந்த அவர்மீது முகிழ் நிலை ஆசிரியர் பெரிதும் விருப்புடன் உறவாடுவர். அது கற்றல் விருத்திக்குப் பெரிதும் துணை நின்றது. சகபாடிகள் அவரை நேசிப்பர். ஊழியர்கள் அன்பு கொள்வர். கல்லூரியை உயர் நிலையிட்டுச் செல்ல அவையும் பெரிதும் துணை நின்றன. இவர்கள் அனைவரிடத்தும் அவர் வாக்கு பெரும் செல்வாக்குக் கொண்டிருந்ததை என்னால் உணரமுடிந்திருந்தது.

திரு.கிருஸ்ணயோகன் அவர்களது சிந்தனையும், சொல்லும், செயலும் அவர் பல்லாண்டு ஆரோக்கியத்துடன் நிறைவாழ்வு வாழ்ந்திட நல்லூர் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**மூனைவர்.திருநாவுக்கரசு**
**கமலநாதன்**



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முன்னாள் பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரும் எனது நண்பனுமாகிய திருவாளர் கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கற்ற அதே காலத்தில் அவரும் கற்றார். அவர் கற்கும் காலத்தில் அமைதியான குணம் உள்ளவராகவும், ஏனைய சக மாணவர்களுக்கு கற்றலில் உதவும் மனப்பாங்குடையவராகவும், மிகவும் பொறுமைசாலியான வராகவும், மற்றவர்களுக்கு நயவஞ்சகம் செய்ய நினைக்காதவராகவும், மற்றவர்களுடன் வீண்பேச்சை வளர்த்துக் கொள்ளாதவராகவும் காணப்பட்டார் (அதை தற்போதும் கடைப்பிடிப்பவராகவும் காணப்பட்டார்). அவர் கணிதத்தில் வல்லுநராக காணப்பட்டதன் காரணமாக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விரிவுரையாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவர் தனது விரிவுரையாளர் கடமையை சரிவரச் செவ்வனே செய்ததிற்கு சாட்சியாக அவரது வீட்டிற்கு நான் சென்றபோது அவர் கற்பித்த மாணவர்களால் (சகல கற்கை ஆண்டு) தாங்கள் வெளியேறும்போது அவருக்கு பிறந்த நாள் கொண்டாடி நினைவுச் சின்னம் வழங்கியது அமைந்திருக்கிறது.

அவர் ஆரம்ப கணிதத்தை மிக இலகுவாக மாணவர்கள் மனதை கவரும் விதத்தில் செயற்பாட்டினூடாக கற்பிப்பவர். ஆரம்ப கணித மன்றத்தின் பெறுப்பாசிரியராக நீண்ட காலமிருந்து பல செயற்றிட்டங்களைச் செய்து மாணவர்களை சரியாக நெறிப்படுத்தியவர். அவர் தான் எடுத்த எந்தக் காரியமென்றாலும் சரியாகச் செய்து முடியும்வரை ஓய்வெடுக்காத ஒருவராய் காணப்பட்டார். அவர் தனது வேலைப்பளுவின் மத்தியில் எவரிடமும் கோபப்பட்டதையோ கோபமாகப் பேசியதையோ காணமுடியவில்லை. பொறுமைக்கு ஒரு முன்னுதாரணமாகவும், எவரிடமும் அன்பாகப் பழகுபவராகவும் இருந்ததால் அவருக்கு எதிரி என்று யாரும் இல்லை என்று சொல்லலாம். இதனால் கல்விசார் உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மத்தியில் பெரும் மதிப்பை காணக் கூடியதாயிருந்தது.

நான் பீடாதிபதியாக இருந்த காலத்தில் மிகவும் பொறுப்புடனும் கல்லூரி நிர்வாகச் செயற்பாடுகளில் நேர்மையாகவும் நிதானமாகவும் கல்லூரிக்கு களங்கம் ஏற்படாத வகையில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகச் செயற்பட்ட சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட பண்பாளன் என்று சொன்னால் மிகையாகாது. கல்லூரித் தாய்க்கு அளப்பரிய சேவையாற்றி மணிவிழாக்காணும் மாண்புறு பெருமகன் ஓய்வுக்காலத்தில் நீண்ட ஆரோக்கியத்துடனும் சீரும் சிறப் புடனும் தனது குடும்பத்தினருடன் இன்றுபோல் என்றும் நிறைவாக வாழ்வதோடு தொடர்ந்தும் கல்விப் பணியையும், சமூகப பணியையும் வழங்க வித்தக விநாயகர் பாதம் பணிந்து எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**கலாநிதி ச.அமிர்தலிங்கம்**

(C-2785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம் | வெளிநாடு

# பிரித்தானியாவில் குளிர்கால காய்ச்சலால் 60 ஆயிரம் பேர் உயிரிழக்கும் அபாயம்

(லண்டன்)

**பிரித்தானியாவில் குளிர் காலத்தில் ஒருவித காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 60 ஆயிரம் பேர் வரை உயிரிழக்க நேரிடும் என்று துணை தலைமை வைத்திய அதிகாரி ஜொனாதன் வான்-டாம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

பிரித்தானியாவில் குளிர் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் புளு காய்ச்சல் நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மருத்துவ நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொவிட் பெருந்தொற்று காரணமாக கடந்த ஆண்டு மக்களுக்கு காய்ச்சலுக்கான தடுப்பூசி கிடைக்காமையே இதற்கான காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனால், இந்த குளிர்காலத்தில் 60 ஆயிரம் பேர் வரை காய்ச்சலால் உயிரிழக்க நேரிடும் என்று பேராசிரியர் ஜொனாதன் வான்-டாம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனை முறியடிப்பதற்காக, பிரித்தானியா வரலாற்றில் மிகப்பெரிய காய்ச்சல் தடுப்பூசித் திட்டத்தை அரசாங்கம் தொடங்கியுள்ளது. இதில் 35 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இலவசத் தடுப்பூசிக்கு தகுதி பெற்றுள்ளனர். (7-4)

# சமாதானத்திற்கான நோபல் பரிசு இரு ஊடகவியலாளருக்கு அறிவிப்பு





(ஸ்டாக்ஹோம்)

இவ்வாண்டுக்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு இரண்டு ஊடகவியலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு ஊடகவியலாளர்கள் மரியா ரெசா மற்றும் டிமிட்ரி முராட்டோவ் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கருத்துச் சுதந்திரத்தை பாதுகாத்ததன் மூலம் ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தியமைக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. (7-4)

# பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் காலமானார்

(சென்னை)

திரைப்பட பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் தனது 65 ஆவது வயதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார். 1985 இல் வெளியான 'சிறை' படத்தில் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைத்த 'ராசாத்தி ரோசாப்பூ' என்னும் பாடலை எழுதியதன் மூலமாக தமிழ்த்திரையுலகில் பாடலாசிரியராக தனது பயணத்தை ஆரம்பித்தார்.



தமிழில் இதுவரை 400 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் 1400 பாடல்களை எழுதியுள்ளார். பணக்காரன் திரைப்படத்தில் இவர் எழுதிய 'நூறு வருஷம் இந்த மாப்பிளையும் பொண்ணும்தான்' செம்பருத்தி திரைப் படத்தில் 'நடந்தால் இரண்டடி' உள்ளிட்ட பாடல்கள் மிகவும் பிரபலமானவை. திரைப்பட பாடல்கள் மட்டுமல்லாது தனிப்பாடல்கள், கவிதைகள் உள்ளிட்டவற்றையும் எழுதியுள்ளார்.

சமீபத்தில் ஒஸ்கார் விருதுக்கு இந்திய படங்களை பரிந்துரைக்கும் குழுவில் அவர் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (7-4)



அமெரிக்காவின் மிசிசிப்பி மாகாணத்தில் உள்ள கிளார்க்ஸ்டேல் நகரில், மகாத்மா காந்தியின் வெண்கல சிலை நேற்று முன்தினம் நிறுவப்பட்டது. அமெரிக்காவில் வோஷிங்டன் உட்பட பல்வேறு நகரங்களில் மகாத்மா காந்திக்கு ஏற்கனவே சிலை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்ட 187 நைஜீரிய பணயக்கைதிகள்

(அபுஜா)

நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் குழந்தைகள் உட்பட 187 பணயக் கைதிகளை விடுவித்துள்ளதாக அந் நாட்டுப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர். ஸம்ஃபாரா மாகாண வனப்பகுதியில் அந்தப் பணயக்கைதிகள் கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

இந்த மீட்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஸம்ஃபாரா மகாணத்தில் தொலைபேசிச் சேவை துண்டிப்பு, பொதுமக்கள் கூடுவதற்குத் தடை போன்ற பல்வேறு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பலனாக, பணயக்கைதிகள் வெற்றிகரமாக விடுவிக்கப்பட்டு, அவர்களது குடும்பத்துடன் மீண்டும் சேர்த்து வைக்கப்பட்டனர்.

பொலிஸாரைவிட அதிக எண்ணிக்கையில் இருக்கும் இந்தக் கும்பல்களுக்கு பெரும் தொகையை அளித்து பணயக்கைதிகள் மீட்கப்பட்டு வருகின்றனர். இந்தக் கடத்தல் செயலில் ஆயிரக்கணக்கான கும்பல்கள் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (7-4)

# டிவி நிகழ்ச்சிகளில் பெண்கள் 'பீட்சா' சாப்பிடும் காட்சிக்குத் தடை

## ஈரான் அரசு அதிரடி

(டெஹ்ரான்)

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்கும் பெண்கள் பீட்சா சாப்பிடுவது போன்ற காட்சிகளில் பங்கேற்கக் கூடாது என்று ஈரான் அரசு அதிரடியாக அறிவித்துள்ளது. ஈரான் நாட்டின் இஸ்லாமிய ஈரான் குடியரசு ஒளிபரப்பு (ஐ.ஆர்.ஐ.பி) துறை, தொலைக்காட்சியில் தோன்றும் பெண்களுக்கான விதிமுறைகளையும், கட்டுபாடுகளையும் ஈரான் வெளியிட்டுள்ளது. அந்த உத்தரவில், 'தொலைகாட்சிகளில் தோன்றும் பெண்கள், சிவப்பு நிறத்திலான எந்தவொரு உணவையும் சாப்பிடவோ, குடிக்கவோ கூடாது. பெண்கள் கைகளில் கையுறைகளை அணிய வேண்டும். பீட்சா, சாண்ட்விச் போன்ற துரித உணவுகளைச் சாப்பிடுவது போன்று தங்களை காட்டிக் கொள்ளக் கூடாது. ஆண்கள் பெண்களுக்கு தேநீர் கொடுப்பது போன்ற காட்சிகள் இடம் பெறக்கூடாது.

அவ்வாறு ஒளிபரப்பு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், ஈரான் இஸ்லாமிய குடியரசு ஒளிபரப்பின் அனுமதி பெற வேண்டும். பாலின உறவுகளைத் தூண்டும் வகையிலான விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்படும். இந்த வழிமுறைகளை யாராவது மீறினால், அவருக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4)

# ஜசான் விமான நிலையம் மீது ஆளில்லாத விமானத் தாக்குதல்

(ஜசான்)

ஏமன் எல்லைக்கு அருகில் உள்ள சவுதி அரேபியாவின் ஜசான் நகரில் விமான நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 10 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நடந்த தாக்குதல்கள் கிங் அப்துல்லா விமான நிலையத்தை குறிவைத்ததாக சவுதி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முதல் ஏவுகணை ஆளில்லா விமானத்திலிருந்து வீசப்பட்டது. இது விமான நிலையத்தின் முகப்பு ஜன்னல்களை உடைத்தது. இதில் காயமடைந்தவர்களில் ஆறு சவுதி பிரஜைகள், மூன்று பங்களாதேஷ் பிரஜைகள் மற்றும் ஒரு சூடான் பிரஜை அடங்குவதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இரண்டாவது வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதல் நேற்று அதிகாலையில் இடைமறிக்கப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு உடனடி பொறுப்பை யாரும் ஏற்கவில்லை. ஆனால் சமீபத்தில் சவுதியை இலக்கு வைத்து பல தாக்குதல்களை நடத்திய ஏமனின் கவுதி படைகளே... (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நீண்ட நாட்களாக ஆலடியில் நாங்கள் சந்திக்கவில்லை.

இந்தக் காலத்தில் எங்களை விட்டுப் பிரிந்த அத்தனை பேருக்கும் எங்களின் ஆத்மார்த்தமான அஞ்சலியைச் செலுத்திக் கொள்கின்றோம்.

இதற்கு மேலாக, எங்களின் மதிப்புக்குரிய சிரேஷ்ட சட்டத்தரணி புத்தூர் சிவநேசன் அவர்கள் எங்களை விட்டுப் பிரிந்து விட்டார். அற்புதமான மனிதநேயப் பண்பாளர், மிகச் சிறந்த பேச்சாளர், அகில இலங்கை அமுதசுரபிக் கலாமன்றத்தின் பட்டிமன்ற நடுவர் எனப் பலவகை ஆளுமை கொண்ட சட்டத்தரணி சிவநேசன் அவர்களின் மறைவு பேரிழப்பாகும்.

அவருக்கு எமது மௌன அஞ்சலியைச் செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.


தொடர்ந்து ஆலடியில் நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தத்தை மெல்லக் கலைப்பதாக கங்காணி கார்த்திகேயனின் ஆதங்கம் அமைந்தது.

கொடிய கொரோனாத் தொற்று வாழ வேண்டியவர்களை வஞ்சித்து விட்டது.

அதிலும் மிக மோசமான கொடுமை, குழந்தை பிரசவித்த இளம் தாய்மார் சிலரைக் கூடக் காவுகொண்டதுதான். எப்படித்தான் இந்த இழப்புக்களைத் தாங்கப் போகிறோம்.

கங்காணி கார்த்திகேயனின் ஆதங்கம் ஆலடியை மேலும் கலங்க வைத்தது.

நிலைமையைப் புரிந்து கொண்ட விதானையார் விசுவலிங்கம் எல்லாவற்றுக்கும் காலம்தான் மிகச் சிறந்த ஔடதம். காலம் எங்களை ஆற்றுப்படுத்தட்டும். இறைவன் எங்களை வழிப்படுத்தட்டும். இறந்து போனவர்களின் புனித ஆத்மாக்கள் எங்களை ஆசிர்வதிக்கட்டும்.



## சமய அமைப்புகளும் சனங்களுக்கு எதிராக எண்டால்...

எவரும் மனதைத் தளரவிடாமல் எல்லாத் துன்பங்களையும் எதிர்கொண்டு இந்த மண்ணில வாழ வேண்டும் என்ற மனத்திடத்தோடு செயலாற்றுவதுதான் முக்கியம் எனக் கூறி முடித்தார்.

விதானையார் இவ்வாறு கூறி முடிக்க, சாத்திரியார் சதாசிவம் பெருமூச்சு விட்டவாறு இனி இந்த உலகம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கத்தான் போகிறது. எங்கட காலம் ஒரு மாதிரியாகப் போயிற்றுது. எங்கட இளம் சந்ததிகள் தான் கஷ்டப்படப் போகினம்...சாத்திரியார் வேதனையோடு கூறினார்.

மூப்பர்: என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

சாத்திரியார்: மூப்பர் உலகம் அறத்தைத் தொலைத்துப் போட்டு அதர்மத்தில நிண்டு ஆடுது. கொலை, கொள்ளை, போதைவஸ்து கடத்தல் எண்டவாறு மக்கள் சமூகத்தை வதைத்து நிற்கும் போது இயற்கை பொறுக்காது தானே!

சிறாப்பர்: சாத்திரியார் சொல்லுறதில நூறு வீதம் உண்மை இருக்கு.

போதைவஸ்து விவகாரம் இண்டைக்கு நாடு முழுவதையும் நாசமறுத்து வருகுது. அதிலும் எங்கட வடபகுதியில போதைவஸ்துக்கு அடிமையான இளைஞர்களால அந்தக் குடும்பங்கள் கந்தறுந்து நிற்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான் போதைவஸ்து கடத்தலை முற்றாக ஒழிக்க வேணும் எண்டு உறுதியாக நிண்டவர். ஆனால் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க இந்த நாட்டில எவரும் முன்வரவில்லை. இப்ப போதைவஸ்து, கடத்தல் கோர தாண்டவம் ஆடுது.

பண்டிதர்: இதுகள் மட்டுமல்ல சமய அமைப்புகளும் கடவுளை, அறத்தை, நீதியை மறந்து செயற்படும்போது என்னெண்டு இந்த மண்ணில மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் ஆலடியில சிறிது நேரம் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

மூப்பர்: என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள். எனக்கெண்டால் ஒண்டும் புரியல்ல.

பண்டிதர்: மன்னாரில நீண்ட காலமாக நெற்செய்கை செய்த விவசாயிகளின் நிலங்களை அங்கிருக்கிற கத்தோலிக்கத் திருச்சபை நிர்வாகம் உரிமை கோரியது. அதனால பெரிய பிரச்சினை நடந்து கொண்டிருக்குது. முன்பெல்லாம் தேவாலயங்கள் தங்களுக்குரிய காணி நிலங்களை பொதுமக்களுக்கு வழங்கிப் பூதானம் செய்தன.

ஆனால் இப்ப பொது மக்கள் பயிர் செய்த நிலங்களை தமக்கு உரித்தாக்குவதில திருச்சபைகள் முனைப்புக் காட்டுகின்றன.

இவ்வாறு பண்டிதர் கூற, இடையில குறுக்கிட்ட வாத்தியார் வைத்திலிங்கம்; தீவகத்திலுள்ள அல்லைப்பிட்டியில அமைக்கப்பட்ட இன்ரநஷனல் ஸ்கூல் உள்ள நிலத்தின்ர பதிவை நிரப்ப அல்லைப்பிட்டியில இருக்கிற நிலத்து மண், குளத்து மண் எல்லாத்தையும் எடுக்கினமெண்டு அந்தப்பகுதி மக்கள் ஆலடிக்குக் கடிதம் எழுதியிருக்கினம்.

அந்தக் கடிதத்தில மழை காலத்தின்போது எங்கள் குடியிருப்புக் காணியில வெள்ளம் தேங்கி வீட்டிற்குள்ள வருகுது. இதால எங்கட வீடுகளில நிம்மதியாக இருக்க முடியல்ல. அந்தப் பள்ளத்தை நிரப்புவதற்கு ஒரு ரைக்டர் மண் எடுக்க முடியல்ல. கேட்டாலும் தருகினம் இல்லை. ஆனால் அல்லைப்பிட்டியில எங்கெல்லாம் மண் இருக்குதோ எங்கெல்லாம் குளம் வெட்டப்படுகுதோ அந்த மண் எல்லாம் சர்வதேசப் பாடசாலையின் பெரும் நிலப்பரப்பை நிரவுவதற்குப் போகுது எண்டு மக்கள் குற்றம் சுமத்தியிருக்கினம்.

விதானையார்: வயல் பரப்பில பாடசாலை கட்டுவதற்கு அனுமதி குடுத்த போதல்லோ அல்லைப்பிட்டி மக்கள் அதுபற்றிச் சிந்தித்திருக்க வேணும். இவ்வாறு விதானையார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**வலி சொல்லும் தொடர்...**

**வீட்டுக்கு வந்த ஆயுததாரிகள், இவனது கண் முன்னாலேயே தகப்பனையும் தாயையும் துண்டு துண்டாக வெட்டிக் கொன்றிருக்கிறார்கள்.**




ஆனால், இந்தப் பழி நிலத்தின் யதார்த் தம் அகதிகளின் தடித்த தோலில் உறைப்பதற்கு இரண்டொரு வாரங்கள் தேவைப்படுகின்றன. தாங்கள் அகதிகள் என்பதை நிரூபிப்பதற்கு எத்தனையோ மாதங்களாக, பற்பல வருடங்களாக, இந்த அகதிகள் தங்கள் உயிரைப் பிளந்து காண்பிக்க வேண்டியிருக்கிறது.

பட்ட ரணங்களைப் படம் கீறிக் காட்டவேண்டியிருக்கிறது. நிர்வாணமாக நின்று தங்கள் காயங்களை காட்சிப்படுத்த வேண்டியிருக்கிறது. சிலர் இல்லாத காயங்களைப் புதிதாக உருவாக்கியும் காண்பிக்க வேண்டியிருக்கிறது. அழுகையைக்கூட மொழிபெயர்த்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஒவ்வொருவர் விதியையும் எழுதும் குடிவரவு அதிகாரிகளின்பேனைகளுக்குள் தங்கள் உயிர்வலியைத் திணிப்பதற்கு என்னவெல்லாமோ செய்ய வேண்டியிருக்கிறது. சாப்பாட்டு மண்டபத்துக்கு அழைத்துப் போன எல்லோரும் மின் வெளிச்சத்தில் கண்வெடித்து ஆளையாள் புன்னகைத்துக் கொண்டார்கள்.

தங்கள் கைகளிலிருந்த குழந்தைகளைவிடவும், மழலைகளாக ஒரு கணம் உணர்ந் தார்கள். சமையல்காரர் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த வதக்கிய ஆப்கதன் ரொட்டிகளை, வறுத்த கோழிக்கால் களோடு பரிமாறத் தொடங்கினார்.

பிளாஸ்டிக் தாம்பாளங்கள் நிறைய தாராளமாக அப்பிள்களும், ஆரஞ்சு, கிவி பழங்களையும் ஒவ்வொரு மேசைக்கும் கொண்டுபோய் வைத்தார்கள். நிறைந் திருந்த சாப்பாட்டு மண்டபத்தின் மூன்று வாசல்களிலும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

வந்தவர்களுக்குரிய படுக்கை விரிப்புகள், ஆடைப்பொதிகள், அத்தியாவசியப் பொருட்கள் போன்றவை சாப்பாட்டு மண்டபத்துக்கு வெளியே வரிசையில் வைக்கப்பட்டிருந்தன. சாப்பாடு முடிந்த பிறகு, அவரவர் அறைகளுக்கு அழைத்துச் செல்வதற்கு அதிகாரிகள் ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தனர்.

கொலை நிலத்திலிருந்து பிழைத்து வந்தவர்களின் வயிற்றுக்கு ஒரு சில ரொட்டித்துண்டுகளே அன்றிரவுக்கு போதுமாகயிருந்தன. ஒவ்வொரு மூச்சும் அவர்களுக்கே புதினமாயிருக்கிறது. என்னோடு பணிபுரிகின்ற ஆப்கான் நண்பன் சாப்பாட்டு மண்டபத்திலேயே வைத்து புதியவர்களுக்குரிய முகாம் நடைமுறைகளை விளங்கச் சொன்னான்:

அவனது உரையை கவனமாகக் கேட்டுக்கொண்டாலோ அல்லது கேட்பதுபோல காண்பித்துக் கொண்டாலோ தமக்கு விரைவாக விசா தந்து விடுதலை செய்துவிடுவார்கள் என்ற அப்பாவித்தனம் அவர்கள் எல்லோரது அமைதியிலும் உறைந்து கிடந்தது.

நான் முகாமின் பாதுகாப்பு அதிகாரிகள் தலைமை அலுவலகத்தை நோக்கி நடந்தேன். புதியவர்களின் பெயர் விபரங்களை கணனியில் பதிவேற்றுவதற்கு முன்னர், மின்னஞ்சலைத் திறந்தேன். பொறுப்பதிகாரிகளுக்கு குடிவரவு அமைச்சின் மெல்பேர்ன் காரியாலயம் அனுப்பிய மின்னஞ்சலில் பின்வரும் விடயங்கள் முக்கியமானவையாகச் சிவப்பெழுத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன.

நான் முகாமின் பாதுகாப்பு அதிகாரிகள் தலைமை அலுவலகத்தை நோக்கி நடந்தேன். புதியவர்களின் பெயர் விபரங்களை கணினியில் பதிவேற்றுவதற்கு முன்னர், மின்னஞ்சலைத் திறந்தேன். பொறுப்பதிகாரிகளுக்கு குடிவரவு அமைச்சகத்தின் மெல்பேர்ன் காரியாலயம் அனுப்பிய மின்னஞ்சலில் பின்வரும் விடயங்கள் முக்கியமானவையாகச் சிவப்பெழுத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இன்றிரவு முதல் முகாமில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், முகாம் வேலிக்கான சோதனையை அதிகரிக்கவும்.

"வந்திருக்கும் அகதிகளில் தலிபான்களுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடியவர்களும் இருக்கிறார்கள் என்ற தகவல் நமக்குக் கிடைத்துள்ளது. அவர்கள் குறித்த முழுமையான விசாரணைகள் முடிவடையும் வரைக்கும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும்".

"அப்பாஸ் என்ற பெயரில் தாய், தகப்பன் இல்லாது தனியாக வந்துள்ள இளைஞனைத் தனிப்பட கவனம் செலுத்தவும். "ஆப்கனின் மர்ஜா பிரதேசத்தில் போதைப்பொருள் கொடுக்கல்-வாங்கலில் இவனுடைய தமையன் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறான்.

சுட்டுக் கொன்றவர்களை படுகொலை செய்வதற்கு இவனுடைய தகப்பனார் துப்பாக்கியோடு திரிகிறார் என்று கேள்விப்பட்டு, வீட்டுக்கு வந்த ஆயுததாரிகள், இவனது கண் முன்னாலேயே தகப்பனையும் தாயையும் துண்டு துண்டாக வெட்டிக் கொன்றிருக்கிறார்கள்.

படகில் வந்தபோதும், அவுஸ்திரேலியா வந்த பின்னரும் இவனது நடத்தை குறித்து சக அகதிகளே அச்சம் தெரிவித்திருக்கிறார்கள் என்பது கிறிஸ்மஸ் தீவில்வைத்து மேற்கொண்ட விசாரணையில் பதிவாகியிருக்கிறது.

அதிக அறைகள் அமைந்துள்ள அல்பா காம்பவுண்டின் ஒன்பதாவது இலக்க அறையில் இவனை தங்க வைக்கவும்."

மின்னஞ்சலை மூடிவிட்டு, அகதிகள் இணையக்கோப்பில் அப்பாஸின் விபரத்தை ஒவ்வொன்றாகத் தட்டினேன். 1997 ஆம் ஆண்டு பிறந்தவன். இரண்டு புருவங்களும் உள்நோக்கி வளைந்து போர் வாள்களாகக் குவிந்திருந்தன. கூர்ந்து பார்க்கும் கண்களில் விகாரம் கொப்பளித்தது. ஒருவித எரிச்சலோடு பூமிக்கு வந்தவனைப்போல, கோபம் அவனது இமைகளுக்குள் கூடுகட்டியிருந்தது.

அவன் சிரித்தாலும் பயமாகத் தானிருக்கும் போலிருந்தது. உப்பு நீர் பட்டு வெடித்ததோ அல்லது தானே கடித்துக்கொண்டானோ தெரியவில்லை, உதடுகள் வெடித்தும் உரிந்தும் காணப்பட்டன. இரண்டு கன்னங்களிலும் பருக்களை நகங்களால் உடைத்து பிராண்டியதால் தோன்றிய வடுக்கள், கூர் முகத்தில் தழும்புகளாகத் தெரிந்தன.

தொலைபேசியில் சக அதிகாரியை அழைத்து, சாப்பாடு முடிந்த பின்னர் அப்பாஸ் என்ற சிறுவனை, "அல்பா" காம்பவுண்டின் ஒன்பதாம் இலக்க அறையில் கொண்டுபோய் விடும்படிச் சொன்னேன். வந்தவர்கள் அத்தனை பேரது தனித்தனிப் பெயர்களை - அவர்களது குடும்ப விபரங்களை - குடிவரவு அமைச்சின் பொது இணை யத்துக்குள் ஒவ்வொன்றாக அடுக்கினேன். பதிவுசெய்து முடிக்கும்போது, ஆழ்ந்த அமைதியின் நிழலில் இரவு தன் வாலை சுருட்டிக்கொண்டு படுத்திருந்தது.

முகாமின் எல்லையோரமாக வேலிச் சோதனையை செய்யலாமென்று, நீண்ட தடியொன்றோடு புறப்பட்டேன்.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**ரஜினியின் அண்ணாத்த திரைப்படத்திற்காக எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடிய பாடலைக் கேட்டீர்களா வியாசரே?**

தாமரை இணுவில்

**சமூகத்தில் ஒருவனை நல்லவன்- கெட்டவன் என சர்வ சாதாரணமாக வகைப்படுத்தி விடுகின்றார்களே?**

எல்லாவற்றையும் பார்த்துப் பொறுத்துப் போகும் போது நம்மை நல்லவன் என தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் சமூகம் எதிர்த்துக் கேள்வி கேட்டுவிட்டால் சர்வ சாதாரணமாக கெட்டவன் எனும் பெயரை முதுகில் பச்சை குத்தி விடுகிறது.

இது தான் சமூகம். இதற்கெல்லாம் பயந்தால் நாம் நாமாக வாழ முடியாதே.

இவை எல்லாம் நிலவைப் பார்த்துக் குரைக்கும் நாய்க்குச் சமமானது. அவ்வளவு தான்.

சீலா யாழ்ப்பாணம்

**மனிதனாகப் பிறந்தால் சுய கௌரவம் அவசியம் தானே வியாசரே?**

சுய கௌரவம் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் ஒன்று உண்டு, சொல்கிறேன்.

இது மழைக்காலம். மழை பெய்து கொண்டிருக்கும் போது வீதியில் மழைக்கோட் அணிந்து பலரையும் மழைக்கோட் அணியாமல் நனைந்தபடி சிலரும் செல்வதை அவதானித்திருப்பீர்.

மழைக் கோட் போட்டுக் கொண்டு செல்பவர்கள் மழையில் நனையாமல் செல்வார்கள் என்று நினைக்கின்றீர்களா? அது தான் இல்லை. அவர்களும் தாராளமாய் நனைந்து கொண்டு தான் செல்வார்கள்.

ஆனால் வீதியில் மழைக்கோட் போட்டுக் கொண்டு செல்வது கௌரவம்.
சுயகௌரவம் என்பதும் இது போல தான். அது மற்றவர்களுக்கானதே.

தமிழ் யாழ்ப்பாணம்

**தமிழினத்தை ஐ.நா காப்பாற்றுமா வியாசரே?**

ஐ.நா. வே காப்பாற்று ஐ.நா.வே காப்பாற்று என்று கதறியதற்குப் பதில் கடவுளே காப்பாற்று என்று கத்தியிருந்தாலாவது கடவுள் காப்பாற்ற வந்திருப்பாரோ என்னவோ.. எல்லாம் தமிழினத்தின் தலைவிதி.




**அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
021 567 1532
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்**

சிவன் வடமராட்சி

**சமூக மாற்றம் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் கூற முடியுமா வியாசரே?**

தினமும் குடித்துவிட்டு மனைவியை அடிக்கும் கணவனைப் பார்த்து இந்த சமூகம் திட்டித்தீர்க்கும், அதே கணவனுக்கு அடிக்கும் மனைவியைப் பார்த்து ஏழனமாய்ச் சிரிக்கிறது.

ஆண்-பெண் இருவரும் சமம் என்று பேசும் அதே சமூகம் தான் கணவன் மனைவிக்கு அடிக்கும் போது ஒரு. மாதிரியும் மனைவி கணவனுக்கு அடிக்கும் போது வேறொரு மாதிரியும் பிரதிபலிக்கின்றது.

நிதர்சன் வல்வெட்டித்துறை

**தமிழ் மக்களின் ஒற்றுமை என்பது சாத்தியமான விடயமா வியாசரே?**

தமிழ் மக்கள் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றார்கள்.அரசியல் சாக்கடை தான் அவர்களை பிரித்தாண்டுகொண்டிருக்கின்றது.

அந்த சாக்கடையை சுத்தம் செய்தால், மிகவும் உன்னதமான- ஒற்றுமையான இனமாக மீண்டும் மிளிரும் தமிழினம்.

ஆனால் என்னசெய்ய. தமது சுய நலன்களுக்காகவும் சுகபோக வாழ்க்கைக்காகவும் தமிழினத்தின் முதுகில் அட்டையாய் ஒட்டியிருந்து பிரித்தாள்கிறது அரசியல் எனும் சாபக்கேடு.



**ஐ.பி. எல்லில் சென்னை அணியின் மீட்சி, மறுபடியும் மரண அடிவாங்கத் தொடங்கிவிட்டதே?**

தர்நிஷ் யாழ்ப்பாணம்

**ஐ.பி. எல்லில் சென்னை அணியின் மீட்சி, மறுபடியும் மரண அடிவாங்கத் தொடங்கிவிட்டதே?**

எம்.ஜி.ஆர் வில்லனான நம்பியாரிடம் மூன்று தடவை அடிவாங்குவார்.

மூன்றாவது அடியுடன் இரத்தக் காயம் ஏற்படும். அந்த இரத்தத்தை தொட்டுப் பார்க்கும் போது எம்.ஜி. ஆருக்கு வரும் பாருங்க வெறி.

அதன் பிறகு நம்பியார் அடிக்கும் அடி எதுவும் எம்.ஜி. ஆர் மீது விழாது.
எம்.ஜி. ஆர் நம்பியாரை துவம்சம் செய்து விடுவார்.நம்ம சென்னையும் எம்.ஜி.ஆர் போலதான்.மரண அடிக்கு இடமுண்டு. பொறுத்திருங்கள்.

அருந்தவம் சாவகச்சேரி

**ரஜினியின் அண்ணாத்த திரைப்படத்திற்காக எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடிய பாடலைக் கேட்டீர்களா வியாசரே?**

"அண்ணாத்த அண்ணாத்த வாறன் நடையில உடையில..." என்ற அந்த கம்பீரக் குரலைக் கேட்கும் போது கண்களில் நீர் வருவதைத் தடுக்க முடியவில்லை.

எஸ்.பி. பாலசுப்பிரமணியம் என்ற ஒரு உன்னத கலைஞனைப் போல ஒருவர் இனிப் பிறக்கப் போவதில்லை என்று எழுதும் வேளை "இந்தத் தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன்" என்ற பாடல் வரிகள் எங்கோ ஓர் மூலையிலிருந்து என் காதில் ஒலித்தது. மெல்லக் கண்களின் ஓரத்தை விரல்களால் வருடிக் கொண்டேன்.

சுதன் குப்பிழான்

**கூட்டமைப்பை வைத்து இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றதே வியாசரே?**

தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களைப் பேசும் போது கூட்டமைப்பை மட்டுமன்றி தமிழ் தரப்புக்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து பேச வேண்டும் என இவ் விடத்தில் பல முறை பதிவிட்டிருந்தோம்.

ஆனால் அது நடக்க வில்லை. இந்தியாவும் இது விடயத்தில் பிரித்து கையாள்கிறதோ எனும் எண்ணம் தோன்றுகின்றது.

தமிழரின் ஏகோபித்த குரல் கூட்டமைப்பு என்ற நிலை மாறி நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன்,கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் ஆகியோரும் உள்ளனர் என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 260

## அனைத்து மதங்களுமே மருத்துவக் கலையை கற்பித்து நிற்கின்றன

எமது இயற்கை சுற்றாடலை இறைவனாக உருவகித்து போற்றும் மரபு மிகப் பழைமையானது. ஆயகலைகள் 64 இல் ஒன்றான மருத்துவக்கலை தோற்றம் பெற்றது இயற்கை என்ற இறைவனிடமிருந்துதான் என்று சொல்லப்படுகிறது. இந்த இயற்கை வளங்களைப் பாதுகாப்பதும் தூய்மைப்படுத்துவதும் ஒரு இறை பணியாகவே கருதப்படுகிறது.

எமது சுற்றாடல் செழிப்படையும் பொழுது எமது மனம் புத்தூக்கம் பெறுவதுடன் சிந்தனை ஓட்டம் மகிழ்வானதாகவும் அமைதியானதாகவும் மாற்றம் பெறுகிறது.

மனிதனின் சிந்தனை ஓட்டத்தில் ஏற்படும் குழப்பமான நிலையே பல உடல் சம்பந்தமான அறிகுறிகளுக்கும் நோய்களுக்கும் அடிப்படை காரணங்களாக அமைகின்றன என்பதை பல ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

அனைத்து மதங்களுமே மனிதனின் சிந்தனை ஓட்டத்தை நெறிப்படுத்தி சுகப்படுத்தும் அற்புதமான மருத்துவக் கலையை கற்பித்து நிற்கின்றன. இயற்கையுடன் ஒன்றிய எமது வாழ்க்கை முறை எமக்கு சுகத்தை அள்ளித் தருகிறது.

அதிகாலையில் எழுந்து குளித்து தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து கோயிலுக்குச் சென்று கோயிலை 3 தடவை வலம் வந்து ஆசனங்கள், அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து இறை வணக்கம் செய்ய வேண்டும் என்று இந்து மதம் சொல்கிறது.

இங்கே உடைச் சுத்தம், உடல் சுத்தம், உடற் பயிற்சி, மன அமைதி என்ற நான்கு சுகாதார அறிவுரைகள் அடங்கி இருக்கின்றன.

இயற்கைக்கு விரோதமான பஞ்சமா பாதங்களை தவிர்க்குமாறு மதங்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றன. இந்த பஞ்சமா பாதங்களில் அடங்கியிருக்கும் கள், காமம் எனப்படுகின்ற மது அருந்துதல், தகாத பாலியல் தொடர்புகள் என்பவற்றைத் தவிர்த்து விடுவதன் மூலம் AIDS போன்ற பல கொடிய தொற்று நோய்களிலிருந்தும் ஈரல், நரம்புகள் சம்பந்தமான நோய்களிலிருந்தும் எம்மை தற்காத்துக் கொள்ள முடியும்.

எமக்கு சுவாசக் காற்றை வழங்கிக் கொண்டிருக்கும் மரங்கள் எமக்கு சுகத்தை அருளிக் கொண்டிருக்கின்றன. இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தியாக இருந்து கொண்டிருப்பது சூரியன் என்பது எமக்குத் தெரியும்.

சூரிய நமஸ்காரம் எமது வ்ழிபாட்டு முறைகளில் முக்கியமானது. இது காலையில் சூரிய ஒளியிலிருந்து சூரியனை நோக்கி நமஸ்காரம் செய்யும் ஒரு முறையாகும்.


இதனையே மேலைத் தேய நாடுகளிலே மருத்துவத் தேவைகளுக்காக சன்பாத் என்று செய்து வருகின்றார்கள். இதன்மூலம் பல எலும்பு, பல் சம்பந்தமான நோய்களைத் தடுக்க முடியும்.

இயற்கை வளங்களைப் பாதுகாத்து இயற்கையுடன் ஒன்றிய அமைதியான வாழ்வுக்கு பழக்கப்படுவது எமது ஆரோக்கியத்தை மேம்படுத்த உறுதுணையாக அமையும்.

Dr. **சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

## இலை வகை, மரக்கறி வகைகளை
### இரவு உணவில் சேர்த்துக் கொள்வது பாதுகாப்பானதா?

**இலை வகைகளை இரவு உணவில் சேர்த்துக் கொள்வதால் தீய விளைவுகள் ஏற்படும் என்ற ஒரு பரவலான அபிப்பிராயம் நிலவுகிறது. இது சம்பந்தமான உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவீர்களா?**




மூன்று நேர உணவிலும் இலை வகைகள், மரக்கறி வகைகளைச் சேர்த்துக் கொள்வது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது. இரவு வேளைகளில் இலைக்கறி வகைகளை உண்பது ஆபத்தானது என்ற அபிப்பிராயம் ஒரு மூட நம்பிக்கை ஆகும். இதில் எந்த வித உண்மையும் இல்லை. ஆனால் உணவு உண்டவுடன் உறங்கச் செல்வது ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல.

இரவில் எந்த வகையான உணவை உண்டாலும் 1-2 மணி நேரத்துக்குப் பின்பு படுக்கைக்குச் செல்வது நல்லது. 3 நேர உணவிலும் இலைக்கறி வகைகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் குடல் நோய்கள், இருதய நோய்கள், நீரிழிவு, உடல் நிறை அதிகரிப்பு போன்ற பல பல சுகாதார பிரச்சினைகளில் இருந்து நாம் பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள முடியும். மரக்கறி இலை வகைகளைத் தெரிவு செய்யும் பொழுது மருந்து தெளிக்கப்படாத மரக்கறி வகைகளைத் தெரிவு செய்து உண்பது நல்லது.

உதாரணமாக அகத்தி, சண்டி, முருங்கையிலை, வல்லாரை, தவசிமுருங்கை, வாழைப் பொத்தி, கறிவேப்பிலை போன்ற மரக்கறி வகைகளுக்குப் பொதுவாக மருந்து விசிறப்படுவதில்லை.

Dr. **சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themihealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணிகளிடத்தில் கொவிட் பரவும் வீதம் குறைவு

–விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா–

(கொழும்பு)

**கர்ப்பிணிகளிடத்தில் கொவிட் தொற்று பரவும் வீதமும் தற்போது குறைவடைந்துள்ளது.**

பெருமளவான கர்ப்பிணிகள் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளமை இந்த வீழ்ச்சியில் தாக்கம் செலுத்துவதாக விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் அவர் தெரிவித்தார்.

முதலாம் அலையிலிருந்து இதுவரையில் 8500 கர்ப்பிணிகள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் 56 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் ஒட்டுமொத்தமாக கொவிட் தொற்றாளர்கள் மற்றும் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள கணிசமானளவு வீழ்ச்சிக்கு சமாந்தரமாகக் கர்ப்பிணிகள் கொவிட் தொற்றுக்கு உள்ளாதல் மற்றும் உயிரிழத்தல் என்பனவும் குறைவடையும் என்று எதிர்பார்க்கின்றோம். பெருமளவான கர்ப்பிணிகள் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளமையும் இந்த வீழ்ச்சியில் தாக்கம் செலுத்துகிறது.

தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட கர்ப்பிணிகள் குழந்தையைப் பிரசவித்ததன் பின்னர் ஒரு மாத காலத்திற்கு அவர்கள் தொடர்பில் கண்காணிப்புடனேயே இருப்போம்.

அவ்வாறு இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்புக்களில் எந்தவொரு கரப்பிணிக்கோ அல்லது குழந்தைகளுக்கோ எந்த பக்க விளைவுகளும் ஏற்படவில்லை என அவர் தெரிவித்தார். (நி-5)

# இடமாற்ற தாமதத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்

## வேலை நிறுத்தத்தில் குதிக்கும் மருத்துவர்கள்

(கொழும்பு)

நாடு முழுவதும் பணிபுரியும் மருத்துவர்கள் 4 மணிநேரம் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் செனல் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

மருத்துவர்களின் இடமாற்றத்தில் ஏற்படும் தாமதத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை வேலை நிறுத்தம் நடைபெறும்.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் திறமையின்மையால் இடமாற்ற செயல் முறை தாமதமாகி வருவதாகவும், அமைச்சகம் தனது திட்டத்தைச் சரி செய்யக் கோரி இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# மருத்துவர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையில் மாற்றம்

(கொழும்பு)

அரச மருத்துவர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை தொடர்பான விசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியின் அடிப்படையில் அரசாங்க சேவையில் உள்ள மருத்துவர் ஒருவர் ஓய்வூதியம் பெறுவதற்கான வயதெல்லை 63 ஆக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# நீர்வீழ்ச்சியைப் பார்க்கச் சென்ற இருவர் 200 அடி பள்ளத்தில் தவறி விழுந்து உயிரிழப்பு

## ஹாலிஎலயில் சம்பவம்

(ஹற்றன்)

ஹாலிஎல பகுதியில் உள்ள ரிலா எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்க்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் குறித்த நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியிலிருந்து தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

ரிலா எல்ல நீர்வீழ்ச்சிக்கு அருகே நேற்று முன் தினம் இரவு குறித்த இளைஞர்கள் மதுபோதையில் நீர்வீழ்ச்சியை காணச்சென்றுள்ளனர்.

அதன்போது நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியிலிருந்து சுமார் 200 அடி பள்ளத்தில் விழுந்து இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வீரகெட்டிய மற்றும் தெஹியத்தகண்டிய ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 36 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஹாலிஎல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உச்சக் கட்டம்

ஒரு ஊரிலே ஒரு இளைஞன் இருந்தான். அவனுக்கு வில்வித்தை கற்றுக்கொள்ள வேணும் என்று ஆசை. கற்றுக்கொள்கிறது மட்டும் இல்லை. "இந்த உலகத்திலேயே வில் வித்தையிலே நம்மை மிஞ்சின ஆள் வேறு யாரும் இருக்கக்கூடாது. இதுதான் அவன் ஆசை. பக்கத்தில் உள்ள காட்டில் ஒரு குரு இருந்தார். வில்வித்தையில் மிகக் கெட்டிக்காரர். நூறு அடி தூரத்திலே ஒரு சின்ன இலையைக் குறி வைத்து அம்பை விடுவார். அம்பு அந்த இலையை சரியாக துளைத்துக் கொண்டு போய்விடும். அவ்வளவு கெட்டிக்காரர். அவரிடம் இவன் போனான். ''என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள். வில்வித்தை கற்றுக்கொடுங்கள் '' என்றான்.

அவர் சொன்னார்..." முதலிலே கண்களை மூடாமல் உன்னிப்பாய் பார்க்கிறதுக்குக் கற்றுக் கொள். அதன் பின்பு இங்கே வா " என்றார். இவன் திரும்பி வீட்டுக்குப் போனான். வீட்டிலே இருந்த தறியிலே ஊடும்பாவும் நகர்வதைக் கண் சிமிட்டாமல் பார்த்துப் பழகிக்கொண்டான். இந்தப் பயிற்சி முடிவதற்குள் இரண்டு வருடம் ஆகிவிட்டது. அதன் பின்பு அந்தக் குருவைத் தேடிப் போனான். கண் சிமிட்டாமல் பார்த்துப் பழகி விட்டேன் என்றான். "சரி...இப்ப தான் நீ முதல் படியிலே இருக்கிறாய். இனிமேல் பார்வையைக் கூர்மைப்படுத்திக்கொள். கண்ணுக்குத் தெரியாத பொருள் தெரிய வேண்டும். சின்னப் பொருள் கூட உன் கண்ணுக்குப் பெரிதாகத் தெரிய வேணும். இதையும் பழக்கப்படுத்திக் கொள். அதற்கு பின்பு என்னை வந்து பார்'' என்றார். சரி என்று சொல்லி இவன் வீட்டுக்குப் போனான். தோட்டத்திலே உள்ள ஒரு கண்ணுக்குத் தெரியாத சின்ன பூச்சியை எடுத்து ஒரு புல் இதழிலே வைத்தான்.

அதை வீட்டுக்குக் கொண்டு வந்து ஜன்னலில் தொங்க விட்டான். தினமும் பூச்சியை உற்றுப் பார்க்க ஆரம்பித்தான். முதலிலே பூச்சி சரியாகத் தெரியவில்லை. நாள் ஆக ஆக அது பெரிதாக ஆகிவிட்டது. நல்லா பார்க்க முடிந்தது. அதன் பின்பு குருவிடம் வந்தான். கொஞ்ச நாளிலே எல்லா நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டான். வில்வித்தையிலே நிபுணன் ஆகி விட்டான். முந்நூறு அடி தூரத்திலே உள்ள சிறிய இலையைக்கூட சரியாக குறி வைத்து அடித்து அம்பாலே துளை போட்டான். ஒரு கோப்பையிலே தண்ணீரை நிரப்புவது, அதை வலதுகை முழங்கையிலே வைக்கிறது. அப்படியே வைத்துக்கொண்டு அம்பை விடுகிறது. குறியும் தவறாது. மரப்பையிலே உள்ள தண்ணீரும் சிந்தாது. இனிமேல் அவன் சாதிக்க வேண்டியது எதுவும் கிடையாது. இருந்தாலும் அவனை மிஞ்ச ஆள் இருக்கக் கூடாது என்பதே அவன் குறிக்கோள். அதற்கு தடையாக ஒருத்தர் இருக்கிறாரே அவர்தான் கற்றுக் கொடுத்த குரு. அவர் இருக்கக்கூடாது என்று நினைத்தான். அவருக்குத் தெரியாமல் ஒரு அம்பை எடுத்து விட்டான். ஆனால் அந்தக் குரு கண்ணிமைக்கிற நேரத்திலே பக்கத்திலே இருந்த குச்சியை எடுத்து அந்த அம்பைத் தட்டி விட்டார். அதுக்காக சீடன் மீது கோபடவில்லை. அவனைக் கூப்பிட்டுச் சொன்னார். இதோ பாரப்பா எனக்குத் தெரிந்ததெல்லாம் உனக்குக் கற்றுக் கொடுத்து விட்டேன். என்னைவிடப் பெரிய குரு ஒருத்தர் இருக்கிறார். அதோ அந்த மலை உச்சியிலே இருக்கிறார். அவரிடம் நீ கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கு என்று சொல்லி அவனை அனுப்பி வைத்து விட்டார். உடனே சீடன் அந்தப் பெரிய குருவிடம் போனான். "நான் வில்வித்தையிலே கெட்டிக்காரன் தானாவென்று எனக்குத் தெரிய வேணும் '' என்றான். அதற்கு குரு கேட்டார். "சரி அதைத் தெரிந்து கொள்ளலாம். அப்படியென்றால் உன்னாலே வில் அம்பு இவை இரண்டும் இல்லாமல் குறி வைக்க முடியுமா? ''என்று கேட்டார். இப்படிக் கேட்டுவிட்டு அவனை ஒரு மலை உச்சி விளிம்புக்கு கொண்டு போய் நிறுத்தினார்.

எட்டிப் பார்த்தால் கீழே பயங்கரமான பாதாளம். அவனுக்கு தலை சுற்ற ஆரம்பித்து விட்டது. அப்படியே தலையைப் பிடித்துக்கொண்டு கீழே உட்கார்ந்தான். இப்ப அந்த குரு சிரித்துக்கொண்டே " வில்வித்தை என்றால் என்ன என்று பார் "என்றார். "உங்கள் வில் எங்கே என்றான். "வில்லா அது எதற்கு? வில்லும் அம்பும் தேவைப்பட்டால் நீ இன்னும் ஆரம்ப நிலையிலே இருக்கிறாய் என்று அர்த்தம். உண்மையான வில்வித்தைக்கு அவை இரண்டும் தேவையில்லை என்றான். 9 ஆண்டுகள் அவரிடம் இருந்தான். அதன் பின்பு ஆணவம் அவனிடம் இல்லை. பக்குவம் அடைந்து விட்டான். பழைய குரு மறுபடியும் இவனை வந்து பார்த்தான். " நீ இப்போ நிபுணன் ஆகிவிட்டாய். உன் கால்களை தொடுவதற்குக் நான் அருகதை இல்லாதவன்! " என்றான். யாராவது வில் வித்தையைப் பற்றி கேட்டால் அவன் சொல்லுவான்...

பேச்சின் உச்சக்கட்டம் மௌனம். செயலின் உச்சகட்டம் செயலின்மை. வில்வித்தையின் உச்சகட்டம் வில்லை எய்யாமல் இருப்பதுதான்! என்றான். அதன் பின்புதான் அவன் புகழ் எங்கும் பரவியது.

ஒருநாள் ஒரு நண்பன் வீட்டுக்குப் போயிருந்தான். அங்கே இவனுக்குப் பழக்கப்பட்ட பொருள் ஒன்று இருந்தது. அதைப் பார்த்தான். அது என்ன என்பது இவனுக்குச் சரியாக நினைவு வரவில்லை. யோசித்துப் பார்த்து அந்த நண்பனையே கேட்டானாம்..."அது என்ன? அதையேன் இங்கே வைத்திருக்கின்றாய் என்று கேட்டான். இப்ப அந்த நண்பன் சிரித்துக் கொண்டே சொன்னான் "நீ வில்வித்தையிலே சிறந்த நிபுணன் ஆகிவிட்டாய். அதனாலே தான் அது என்ன என்பதை மறந்துவிட்டாய். அதுதான் வில்லும் அம்பும் '' என்றான். இதுதான் நிபுணத்துவத்தின் உச்ச நிலை.

நாமெல்லாம் அன்றாட வாழ்க்கையிலே பல விடயங்களை மறந்து விடுகிறோம். அதனாலே அதிலெல்லாம் நிபுணத்துவம் அடைந்து விட்டோம் என்று அர்த்தம் இல்லை. நம்ம ஆள் ஒருத்தன் வீட்டிலே அவனுடைய அம்மாவைப் பார்த்துக் கேட்டானாம். " அது என்னம்மா என்னமோ குச்சி மாதிரி இருக்கு. நம்ம வீட்டிலே என்னைத் தவிர எல்லோருமே அதைத் தினமும் உபயோகப்படுத்துறிங்கள்?'' என்று கேட்டிருக்கிறான். ''அதுதான் பேஸ்ட்–பிரஷ் பல்லு விளக்கிறது என்று ஒரு காரியம் உண்டு. அதைச் செய்யிறதுக்காக உபயோகப்படுத்திற பொருள் அது!'' என்றாராம் அந்த அம்மா. (ஜென்னுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் தாவோ தத்துவத்தை விளக்கும் நஹாசிமாடோன் எழுதிய கதை அது). சீடனின் பெயர்: சீசியாங், முதல்குரு :வேய்ஃபைய், இரண்டாவது குரு: கான்யிங், மலையின் பெயர்: ஹோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் இன்மையினால் 250 குடும்பங்கள் இடம்பெயர்வு

(கண்டாவளை)

மன்னார் மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களாகக் காணப்படுகின்ற ஆத்திமோட்டை கூராய் போன்ற விவசாயக் கிராமங்களின் தேவைகள் தொடர்ந்தும் நிறைவு செய்யப்படாமையினால் குறித்த கிராமங்களில் வாழ்ந்த 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களில் தற்போது 150 இற்கும் குறைவான குடும்பங்களே வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த கிராமங்களின் வசதிக்குறைபாடுகள் காரணமாக 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பிரதேசங்களிலிருந்து வேறு இடங்களிற்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளன.

கடந்த கால யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத்தில் இயங்கிய ஆத்திமோட்டைப்பாடசாலை தற்போது கள்ளியடிப்பாடசாலையுடன் இணைப்புப்பாடசாலையாக இயங்கி வருகின்ற போதும் கூராய் கிராமத்தில் உள்ள பாடசாலை குறைந்தளவு மாணவர்களுடனேயே இயங்கி வருகின்றது. மேலும் இக்கிராமத்திற்கான பிரதான வீதி மற்றும் குடியருப்பு வீதி என்பன இன்று வரை புனரமைக்கப்படாத நிலை காணப்படுகின்றது. இதைவிட, காட்டு யானைகளின் தொல்லை மற்றும் போக்குவரத்து வசதியின்மை, மருத்துவ வசதியின்மை போன்ற பல்வேறு பிரச்சனைக்கு முகங்கொடுத்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (7-4-315)

## கிளி.கரியாலை நாகபடுவான்

# தரமுயர்த்தப்பட்ட முதன்முறையிலேயே சாதனை படைத்த மாணவர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பூநகரிக் கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள கிளி/ கரியாலை நாகபடுவான் (இல - 02) அ.த.க பாடசாலை மாணவர்கள் க.பொ.த(சா.த) பரீட்சையில் சாதனை படைத்துள்ளனர்.

இப்பாடசாலை தரம் 11 வரை தரம் உயர்த்தப்பட்டு முதன் முதலாக க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றிய 14 மாணவர்களில் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் 12 மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்பதற்குத் தகுதி அடைந்துள்ளனர் என பாடசாலையின் அதிபர் அருந்தவசீலன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலை மிகவும் பின் தங்கிய பாடசாலை ஆயினும் மாணவர் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.(7-4)



கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகளின் 19 குடும்பங்களுக்கு கரைச்சி பிரதேச சபை மற்றும் கனடிய தேசத்து நண்பர் ஒருவரின் பங்களிப்புடன் சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (படம் : தேவானந்தன்)

# சுகாதாரப் பிரிவினரால் திடீர் சோதனை 6 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(குருமன்காடு)

வவுனியாவில் வங்கிகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்திருந்ததுடன், 6 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கு சென்று அங்கு சமூக இடைவெளி, சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா? என சோதனை செய்ததுடன், தொடர்ந்து பசார் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி என்பவற்றில் அமைந்துள்ள நகைக் கடைகள், உணவகங்கள், புடைவைக் கடைகள், பன்சிக் கடைகள், பலசரக்கு கடைகள், வெற்றிலை விற்பனை நிலையங்கள், பேக்கரி, நகை அடைவு பிடிக்கும்கடைகள், தோல் உற்பத்திப் பொருள் விற்பனையகங்கள் என்பனவும் கண்காணிக்கப்பட்டன. சமூக இடைவெளி பேணாமை மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை சீராக பின்பற்றாமை தொடர்பில் பல வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

மேலும், முகக்கவசம் அணியாது நகை வியாபாரத்தில் ஈடுபட்ட மூவர், பலசரக்கு பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவர், தோல் உற்பத்தி பொருள் விற்பனை செய்த ஒருவர் என ஐந்து பேருக்கும், உணவகத்தில் மக்களை இருக்கைகளில் அமர்த்தி உணவு விற்பனையில் ஈடுபட்ட வர்த்தக நிலைய உரிமையாளருக்கும் என 6 பேருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்ததுடன், அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல செய்யவுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (7-4-250)

# சரணடையச் சென்றவர்கள் மீது மோதியது டிப்பர் வாகனம்

(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டக்காட்டு பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை தொடர்ந்து நேற்றைய தினம் சனிக்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு சரணடையச் சென்ற ஐவர் மீது மன்னார் பொலிஸ் நிலைய நுழைவாயிலில் டிப்பர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.



குறித்த டிப்பர் வாகனம் மோதியதில் நுழை வாயிலில் நின்ற 5 பேரும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார்.மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் மற்றும் சாரதி தப்பி சென்ற நிலையில் டிப்பர் மற்றும் சாரதியை தேடும் பணி மன்னார் பொலிஸாரால் இடம்பெற்று வருகின்றது. (7-4-285)



கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ஒட்சிசன் செறிவூட்டி இயந்திரம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது. முல்லைத்தீவு இராணுவதலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் SPAK பிலபிரிலய தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர் சுகந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (படம் : சப்தசங்கரி, ஆனந்தன்)



சேவ் எ லைப் (Save a Life) அமைப்பினால் வட மாகாணத்தில் ஒரு இலட்சம் கண்டல் தாவரங்களை மீளுருவாக்கும் முயற்சியின் அடுத்த கட்டமாக பூநகரி களப்பு பகுதியில் நேற்று முன்தினம் மேலும் 500 கண்டல் தாவரங்கள் இளைஞர்களால் நடப்பட்டன.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கான

# சொத்திழப்புக் கொடுப்பனவு வழங்கி வைப்பு



(குப்பிழான்)

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சொத்திழப்புக் கொடுப்பனவு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பொதுமக்களுக்கான சொத்திழப்புக் கொடுப்பனவு, இறந்த மற்றும் காயமுற்ற பயனாளிகளுக்கான கொடுப்பனவு, சேதமடைந்த வணக்கஸ் தலங்களுக்கான கொடுப்பனவு ஆகியன வழங்கி வைக்கப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார். (7-4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் அழகிய பெண்ணும்



ஆனால்இளவரசனான மன்னனின் மகனோ ஆமையிடம், அப்படி ஏதும் நடக்காமல் தன் பார்த்துக் கொள்வதாக சொல்லிச்சமாளித்தான்.

ஆமையும் அவனது வார்த்தையை நம்பியது. இளவரசனோ தன் தாயிடம்சென்று, ஆமை அழகி பற்றிக் கூறினான்.

அவருக்கும் அரசரின் பிடிவாத குணம் பற்றிய வெறுப்பு இருந்தது. அவர், அரசருக்குத் தெரியாமல் அந்த ஆமைக் குடும்பத்தின் வீட்டுக்குச்சென்று அந்தப்பெண்ணைப் பார்க்க முடிவு செய்தார்.

உடை, உணவு வகைகள் மற்றும் தங்க நகைகளை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

தன் மகனான இளவரசன் திருமணம் செய்து கொள்ள விரும்பிய ஆமையின் மகளைப் பார்த்தார். தான்கொண்டு வந்திருந்த பொருட்களையும் கூடவே ஒலிவ் எண்ணெயையும் அந்த அழகிக்குப் பரிசளித்தார்.

அந்த ஆமையிடம், "என் மகனே, உன் மகளை மணந்து கொள்வான், வேறு யாருக்கும் அவளை மணம் பேச வேண்டாம்" என்று உறுதியாகக் கூறினாள்.

ஆமையும் அரசியிடம், அப்படியே தான் காத்திருப்பதாகவும் வேறு யாருக்கும் தனது அழகிய மகளை மணமுடித்துக் கொடுக்க மாட்டேன் எனவும் மறு உறுதி அளித்தது.

ஐந்து ஆண்டுகள், அரசி அந்த ஆமையையும் தன் மகனின் வருங்கால மனைவியான ஆமையின் அழகிய மகளையும் தொடர்ந்து சந்தித்து வந்தாள்.

அதெத் என்பது அந்த ஆமைஅழகியின்பெயர். ஒரு நல்ல தருணத்தில் அவன் தன் தந்தையான் மன்னரிடம் தான் ஆசைப்பட்ட ஆமை அழகி பற்றிச் சொன்னான். அதைக் கேட்டதும் மன்னன் கடும் கோபம் கொண்டான். (தொடரும்)

# மகாபாரதம்

209



அதே சமயம் ஆல மரத்தின் மீது "சந்த்ரக" என்னும் கோட்டானையும் பார்த்து பயப்படத் தொடங்கியது.

என்ன செய்யலாம் என சிந்தித்த எலிக்கு ஒரு யோசனைத் தோன்றியது. "அறிவுள்ளவன் ஆபத்தைக் கண்டு அஞ்சமாட்டான்" அதிலிருந்து தப்ப வழியைப் பார்ப்பான்.

எனவே பகைவனானாலும் பூனையின் உதவியை நாடித் தப்பிக்கலாம். பூனையும் ஆபத்தில் சிக்கியுள்ளது. அதனால் அதுவும் சமாதானத்திற்கு சம்மதிக்கும்.

ஆகவே அதனுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு உயிரைக் காக்கலாம் என எண்ணியது.

மேலும் ஆபத்துக் காலத்தில் உதவி செய்பவனே நண்பன், உதவி செய்யாதவன் பகைவன். சில சமயம் நண்பன் நழுவி விடுவான். பகைவன் உதவி செய்வான்.

எனவே பகைவனாயிருந்தாலும் பூனை என்னால் விடுவிக்கப்படுமானால் எனக்கு உதவி செய்யக் கூடும். எனவே ஒரு முடிவுடன் பூனையிடம் சமாதானம் செய்து கொள்ள வேண்டும்" என முடிவெடுத்தது. பூனையுடன் சமாதான பேச்சை ஆரம்பித்தது.

"பூனையாரே...நட்பு முறையில் ஒன்று சொல்கிறேன். நல்ல வேளை பிழைத்தீர்கள். நீங்கள் தப்பிக்க வேண்டும் என்பது என் எண்ணம்.

இதனால் எனக்கும் நன்மை உண்டாகும். பயம் வேண்டாம்.இப்பேராபத்தை போக்கி விடுகிறேன். என் கூரிய பற்களால் இப் பொறியைத் துண்டு துண்டாகக் கடித்து உங்களை வெளியே செல்லச் செய்கிறேன்.

நீர் இம்மரத்தின் மேல் வெகுநாட்களாக வாழ்கிறீர், நான் மரத்தடியில் பல நாட்களாக வாழ்ந்து வருகிறேன். இதனால் நாம் நண்பர்கள் ஆவோம்.

இப்போது கீழே உள்ள கீரி என்னை இன்னும் பார்க்கவில்லை. பார்த்தால் என் கதி அவ்வளவுதான். எனக்குப் பயமாக இருக்கிறது.

நாம் ஒருவருக்கு ஒருவர்உதவிசெய்துகொண்டு இன்பமாய் வாழலாம் என்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தடுப்பூசி மாத்திரமே போதுமானது

## மருத்துவர் அசேல குணவர்த்தன

**(கொழும்பு)**

**பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தடுப்பூசியை மாத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.**

பாடசாலை மாணவர்களின் நோயெதிர்ப்பு சக்திக்கு ஒரு தடுப்பூசி மாத்திரம் போதுமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 18 மற்றும் 19 வயதுடைய பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற கொவிட் ஒழிப்பிற்கான விசேட செயலணிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இன்ஸ்டாகிராம், வட்ஸ்அப் சேவைகள் மீண்டும் இரு மணிநேரங்கள் செயலிழப்பு

(கொழும்பு)

பேஸ்புக் நிறுவனத்துக்குச் சொந்தமான இன்ஸ்டாகிராம், வட்ஸ்அப் சேவைகள் நேற்று மீண்டும் இரு மணி நேரங்கள் செயலிழந்தன.

ஒரு வாரத்தில் இரண்டாவது முறையாக பேஸ்புக் நிறுவனத்துக்குச் சொந்தமான சமூக வலைத்தள சேவைகள் நேற்று சிக்கலை எதிர்கொண்ட நிலையில் அதற்காக பேஸ்புக் நிறுவனம் மன்னிப்புக் கோரியுள்ளது. உலகம் முழுவதும் பலருக்கு பேஸ்புக்கின் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சேவைகள் இரண்டு மணி நேரங்களுக்குக் கிடைக்கவில்லை. எனினும் கடந்த திங்கட்கிழமையன்று சுமார் 6 மணி நேரத்துக்கும் மேலாக ஏற்பட்ட முடக்கத்துக்கும் இதற்கும் தொடர்பில்லை என பேஸ்புக் விளக்கம் அளித்துள்ளது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

### நன்மைகளை வாரி வழங்கும் நவராத்திரி 4 ஆம் நாள்



**நவராத்திரி தத்துவம்**

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நவராத்திரியின் முதல் நாள் கைடவன், மது என்னும் இரு அரக்கர்களைக் கொன்றார்.

அநீதியை அழித்து நீதியை நிலை நாட்டியதைக் குறிக்கும் வகையில் நவராத்திரி நோன்பும் அதன் நினைவாக கொலு பொம்மைகளை வைப்பதும் நடைபெற்று வருகிறது. தர்மம் வெல்லும், அதர்மம் தோற்கும் என்பதை உணர்த்துவதே நவராத்திரியின் தத்துவம்.

நவராத்திரி உருவான வரலாறு பற்றி தேவி மான்மியத்தில் கூறப்பட்டிருப்பதை பார்க்கலாம்.

**அசுரனை அழித்தனர்**

ஒருகாலத்தில் மகிஷன் என்ற அசுரன் தேவர்களை மிகவும் கொடுமைப்படுத்தி வந்தான். இதுகுறித்து அவர்கள் மும்மூர்த்திகளிடம் முறையிட்டனர்.

மகிஷனின் அட்டகாசத்தை முடிவுக்கு கொண்டுவர சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகியோர் முடிவு செய்தனர். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## இலங்கைக்கு படையெடுக்கவுள்ள ரஷ்யா சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

இந்த மாதமும் அடுத்த மாதமும் சுமார் ஆயிரம் ரஷ்ய சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தரத் திட்டமிட்டுள்ளதாக சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய சுற்றுலா பயணிகள் ஒக்டோபரில் மொஸ்கோ விலிருந்து கொழும்பு செல்லும் அனைத்து ஸ்ரீலங்கன் விமானங்களையும் முன்பதிவு செய்துள்ளனர்.

2019 இல் அதிக எண்ணிக்கையிலான ரஷ்ய சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்தனர்.

அந்த ஆண்டு இலங்கைக்கு வந்த ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 86,000 ஆகும்.

அடுத்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கு ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5)

## நீச்சல் தடாகத்தில் நீராடிய 6 வயது சிறுமி மரணம்

(திருமலை)

பாசிக்குடா சுற்றுலா விடுதியின் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருந்த ஆறு வயது சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி - ரம்புக்கன பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினர் பாசிக்குடாவிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியுள்ளனர்.

அங்கு தங்கியிருந்த குறித்த குடும்பத்தின் பிள்ளைகள் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருக்கும் போது 6 வயதுடைய சிறுமி நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 160 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 120 |
| தக்காளி | 80 | 70 | 60 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 150 | 150 | 140 | 160 |
| கரட் | 100 | 160 | 140 | 160 |
| பூசணி | 80 | 100 | 60 | 60 |
| புடோல் | 120 | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 100-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 140. | 100-150 | 160. |
| பாகற்காய் | 400 | 600 | 450 | 320 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 160 | 140 |
| பயற்றங்காய் | 380 | 400 | 300 | 320 |
| லீக்ஸ் | 140 | 180 | 180 | 200 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 240 | 150 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 400 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 30 | 60 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-70 | 50-70 |
| இராசவள்ளி | - | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 350 | 350 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 20 |
| வல்லாரை | 20 | 70 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.
– திருவள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கந்தனுக்குப் பணி செய்யவென்றே அவன் தந்த வரம் மாப்பாணர்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் எஜமான் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள் நேற்றைய தினம் (09) கந்தப் பெருமானின் கழலடி சேர்ந்தார் என்ற செய்தி காற்றோடு கலந்து கொண்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் எஜமானாக இருந்து முருகப் பெருமானுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து பெரும் பணியாற்றிய குமாரதாஸ் மாப்பாணர் அவர்கள் இவ்வுலகுவிட்டு ஏகினார் என்ற செய்தி அனைவரின் இதயங்களையும் நெருட வைத்துள்ளது.

அவரின் மறைவை அறிந்தபோது எம்மை அறியாமல் இழப்பின் துயர் பற்றிக் கொள்கிறது.

நல்லூர் இராசதானியில் தலைவனாக வீற்றிருந்து நம்மை ஆளுகின்ற நல்லூர்க் கந்தப்பெருமானின் நிர்வாகம் என்பது நாடாளும் நிர்வாகத்துக்கு ஒப்பானது.

உண்மை, நல்லூர்க் கந்தனுக்கு உள்நாட்டில் இருந்து மட்டுமல்ல, வெளிநாட்டில் இருந்தும் மக்கள் கூட்டம் வந்து சேரும். மதம் கடந்த மக்கள் வெள்ளம் அலைமோதும்.

முருகனை – ஆறுமுகக்கடவுளை ஒருக்காலேனும் தரிசித்துவிட வேண்டும் என்று முண்டியடிக்கும் இலட்சோப இலட்சம் அடியார்கள், கூடவே குமாரதாஸ் மாப்பாணரை காண்பது பெரும் பேறு எனக் கருதினர் என்பது சத்தியமான உண்மை.

ஆம், குமாரதாஸ் மாப்பாணர் நல்லூர் முருகனால் தன் நிர்வாகப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட ஞானவான் என்பது தான் பொதுமக்களின் ஒரே நிலைப்பாடு.

அவர்களின் அந்த நிலைப்பாடு மாற்றத்துக்கும் மாறுதலுக்கும் உட்படாமல் நீண்டு நிலைத்தது எனும்போது, அதற்குக் க்ாரணம் என்ன என்றறிந்தால்,

நல்லூர் எஜமான் குமாரதாஸ் மாப்பாணரின் அமைதி, எளிமை, எச்சந்தர்ப்பத்திலும் தன்னை முதன்மைப்படுத்தாத மிகப்பெரும் தெய்வீகப் பண்பு, எல்லாம் கந்தசுவாமியாரின் செயல் என்ற சரணாகதி எனப் பட்டியல்படுத்த முடியும்.

இவையாவற்றுக்கும் மேலாக, உலகெங்கும் ஈழத் திருநாட்டின் பெருமைமிகு குறியீடாக விளங்கும் நல்லூர்க் கந்தனின் நேரமுகாமைத்துவம் குமாரதாஸ் மாப்பாணருக்கு கந்தசுவாமியார் கொடுத்த வரம் என்பேன்.

உண்மை. உலகில் நேரமுகாமைத்துவம் பற்றி எழுதியவர்கள் உளர். நேரமுகாமைத்துவத்தை பின்பற்றிய தனிநபர்கள் உளர். நேரமுகாமைத்துவம் பற்றிப் பாடநூலில் படித்தவர்கள் உளர். ஆனால் ஒரு குறித்த நேரத் தில் இரண்டு மூன்று இலட்சம் மக்களை ஒன்றுசேரவும் அத்தனை உற்சவங்களும் அந்தந்த நிமிட மாற்றத்தில் நடந்தேறவும் கோபுரத்துக் கடிகாரம் ஒலிக்க, கந்தப் பெருமான் முகப்பு வாயில் திருக்கதவைத் தாண்டிக் கால் அடி வைக்கவும் அதே ஒழுங்கில் வெளி வீதி வலம் வந்து கடிகார ஓசையோடு கந்தப் பெருமான் உட்செல்லவும்... முருகா! குமாரதாஸ் மாப்பாணர் அன்றி உலகில் யாரால் அதனைச் செய்தாக முடியும்

அன்புக்குரியவர்களே! 92 ஆண்டுகள் இந்த மண்ணில் ஞான வாழ்வு வாழ்ந்து எமக்கெல்லாம் இறை நாட்டத்தை – முருக பக்தியை ஆன்மிக தானமாக வழங்கிய குமார தாஸ் மாப்பாணரின் திருவடி தொழுது அவருக்காக எங்கும் வழிபாடும் பிரார்த்தனையும் செய்து இறுதி விடை கொடுப்போம்.

## நாட்டில் கடந்த 9 நாட்களில் மதுபான விற்பனையால் ரூ. 5 பில்லியன் வருமானம்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஒன்பது நாட்களில் மதுபான விற்பனையின் மூலம் மட்டும் ஐந்து பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

இலங்கை மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜி. குணசிறி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் இவ்வாறு மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக மூடப்பட்டிருந்த மதுபானசாலைகள் கடந்த 21ஆம் திகதி மீளத் திறக்கப்பட்டன.

இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ள ஐந்து பில்லியன் ரூபாய் வருமானமானது உள்நாட்டு மதுபான உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் விற்பனையினால் ஈட்டப்பட்ட வருமானம் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-3)

## டிப்பர் சாரதிகள் இருவர் கைது
### கொடிகாமத்தில் சம்பவம்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாளிற்கும் மிருசுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து மண்ணுடன் வந்த இரு டிப்பர்களுடன் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டாவளை மண்ணிற்கு அனுமதிப்பத்திரம் எடுத்துவிட்டு நாகர் கோவில் மண்ணினை கடத்திச் செல்லும்போது குறித்த டிப்பர்களுடன் சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,104)

## மேலும் 726 பேருக்கு கோவிட் தொற்று

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 726 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் [illegible] நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 525,663 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 32, 738 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதே**சத்தில் தொழில்நுட்பக் கல்லூரி, கற்பகபுரம், நெளுக்குளம் சந்தி, பம்பைமடு, பெரியகாடு, புதிய கோயில்குளம், சாம்பல் தோட்டம், குருக்களூர் , மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம் மணியர்குளம் பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## நவராத்திரி பாமாலை



### வீரத்தின் அதிபதியே

வீரத்திற்கு அதிபதி ஆனவளே
வெற்றித் திலகத்தைத் தருபவளே
வினைதீர்க்கும் தேவியே
உன் திருவடி பணிந்து நின்றோம்
உயர்வை எமக்குத் தந்தருள்வாய்

விஜயகுமார் லஸ்மியா
தரம்-6, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

நவிந்தார்கள் வினை தீர்க்கும் தேவியும் நீ
நலம் சேர்க்கும் தண்டு மாரி நாயகி நீ
அறிந்தார்க்கும் அறியார்க்கும் நீ தெய்வம்
அறிந்தார்க்கும் அறியார்க்கும் நீ தெய்வம்
அம்மா உன் அன்பே தான் பெரும் செல்வம்
அம்மா உன் அன்பே தான் பெரும் செல்வம்

எஸ்.கஜீவன்,
தரம்-8,கொக்குவில் இந்துக் கல்லூரி

**அன்பு மாணவச் செல்வங்களே!**
நவராத்திரி பாமாலையில் உங்கள் கவிதைகள் இடம்பெற வேண்டும் எனின் உங்கள் கவிதைகளுடன் முழுப்பெயர், பாடசாலையின் பெயர், தரம் என்பவற்றை இட்டு


**076 636 3378**

என்ற வைபர் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

## மருத்துவக் குறிப்பு

சம்மங்கிப்பூ கண் நோய்களை குணப்படுத்த வல்லது. இப்பூவின் சாற்றையெடுத்து கண்களில் இரண்டு சொட்டுக்கள் விட்டு வாருங்கள்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை.

❖நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்"உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள் உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்.

❖உங்களைச் சபிப்போருக்கு ஆசி கூறுங்கள் உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.

❖உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். உங்கள் மேலுடையை எடுத்துக் கொள்பவர் உங்கள் அங்கியையும் எடுத்துக்கொள்ளப் பார்த்தால் அவரைத் தடுக்காதீர்கள்.

❖உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள். உங்களுடைய பொருட்களை எடுத்துக் கொள்வோரிடமிருந்து அவற்றைத் திருப்பிக் கேட்காதீர்கள்."

❖ பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.


நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள் அவர்களுக்கு நன்மை செய்யுங்கள் திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் கடன் கொடுங்கள். அப்போது உங்கள் கைம்மாறு,மிகுதியாய் இருக்கும்.

❖[illegible] இருப்பீர்கள். ஏனெனில், அவர் நன்றி கெட்டோருக்கும் [illegible] செய்கிறார்.

உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்



14

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

**மார்ச் 2001 இல், தலிபான்கள் 3 மற்றும் 6 ஆம் நூற்றாண்டுகளில் பாமியனின் பாறைகளில் செதுக்கப்பட்ட இரண்டு மாபெரும் புத்தர் சிலைகளை வெடிக்கச் செய்தனர். இச் செய்கையால் தலிபான்களை உலகமே அதிர்ச்சியுடன் பார்த்தது**

"நான் அந்தச் சிலைகளை உடைக்க விரும்பியதில்லை. சேதமடைந்திருந்த சிலைகளை சீரமைக்க வேண்டும் என்று ஒரு முறை வெளிநாட்டினர் சிலர் வந்து கேட்டனர். எனக்கு அது அதிர்ச்சி தந்தது. ஆயிரக்கணக்கான ஆப்கான் மக்கள் பசியில் செத்துக் கொண்டிருக்கிறார்கள். உயிருள்ள இந்த மக்களை விட உயிரற்ற சிலை தான் இவர்களுக்கு முக்கியமா? அந்தக் கோபத்தில் தான் சிலைகளை உடைக்கச் சொன்னேன்" என்று ஒரு பேட்டியில் சொன்னார் முல்லா முகமது உமர். "சர்வ தேச நாடுகளுக்குப் பாடம் புகட்டவே புத்தர் சிலைகளை உடைத் தோம" என்று தலிபான் வெளியுறவு அமைச்சர் வக்கீல் அகமது முத்தா வக்கீல் சொன்னார். "புத்தர் சிலைகளை உடைக்குமாறு முல்லா உமரிடம் சொன்னது பின்லேடன் தான்" என்கிறார்கள் சில பத்திரிகையாளர்கள்.

"நான்அந்த சிலைகளை உடைக்க விரும்பியதில்லை. சேதமடைந்திருந்த சிலைகளை சீரமைக்க வேண்டும் என்று ஒரு முறை வெளிநாட்டினர் சிலர் வந்து கேட்டனர். எனக்கு அது அதிர்ச்சி தந்தது. ஆயிரக்கணக்கான ஆப்கான் மக்கள் பசியில் செத்துக் கொண்டிருக்கிறார்கள். உயிருள்ள இந்த மக்களை விட உயிரற்ற சிலை தான் இவர்களுக்கு முக்கியமா? அந்தக் கோபத்தில் தான் சிலைகளை உடைக்கச் சொன்னேன்"என்று ஒரு பேட்டி யில் சொன்னார் முல்லா முகமது உமர்.

தலிபான் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தாலும், கல்விமுறை, சுகாதாரப் பாதுகாப்பு, பயன்பாடுகள் அவர்களின் ஆட்சிக் காலத்தில் குறைந்து. வேலையின்மை அதிகரித்தது.

அவதிப்பட்ட ஆப்கான் மக்களுக்கு மனிதாபிமான உதவி செய்ய பல தொண்டு நிறுவ்னங்கள் வந்தன. ஐ.நா. அமைப்பு மூலம் உணவுப் பொருட்கள் வந்தன. அதில் பெரும் பகுதியை தலிபான்களே எடுத்துக் கொள்வார்கள். சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் சேவை செய்ய வந்தன. தலிபான்கள் அவர்களுக்கும் தொல்லை கொடுத்தார்கள். போரால் இடிந்த பழைய அரசு கட்டடங்களை ஒதுக்கி, "தொண்டு நிறுவனத்தினர் இவற்றில் தான் தங்க வேண்டும்" என்று கட்டளை போட்டார்கள். அதனால் பல நிறுவனங்கள் வெளியேறின. இதேபோல ஐ.நா. அலுவலகத்துக்கும் தொல்லை கொடுக்க, ஐ.நா. தனது அலுவலகத்தையே மூடியது. அதன் பின் உணவுப் பொருட்கள் விலை கடுமையாக உயர்ந் தன. "இறைவன் ஏதோ ஒரு வழியில் நமக்கு உணவு கொடுப்பார்" என்று தலிபான் அமைச்சர்கள் சொன்னார்கள். ஆனால், பட்டினிச்சாவுகளே தொடர்கதை ஆகின.

2000-2001 கடுமையான குளிர் காலத்திற்குப் பிறகு, பல மாகாணங்களில் பஞ்சம் ஏற்பட்டது, பாகிஸ்தானுக்கு அகதிகளின் வருகை அதிகரித்தது. அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அபின் உற்பத்தி செழித்தது, அதில் அவர்கள் 10% வரிவிதித்தனர். ஜூலை 2000 இல், வெளிநாடுகளின் அழுத்தத்தின் கீழ், ஆப்கானிய தலைமை அபின் பாப்பி சாகுபடி மற்றும் விற்பனையை தடை செய்தது.

### ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலைகள் தோன்றியது எவ்வாறு?

ஆப்கானிஸ்தானில் இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன், பௌத்தம் முக்கிய சமயமாக விளங்கியது. ஆப்கானிஸ்தானில் பௌத்த சமயம், தெற்கில் இந்துகுஷ் வரை பரவியிருந்தது. இப் பகுதியை ஆண்ட கிரேக்க செலூக்கியப் பேரரசு, மௌரியப் பேரரசுடன் கொண்டிருந்த நட்புறவால், கி.மு. 305 இல் ஆப்கானிஸ்தானில் பௌத்த சமயம் பரவியது. இதன் விளைவாக இப் பகுதியில் வாழ்ந்த கிரேக்க பாக்திரியா பேரரசு (கி.மு.256 - கி.மு.125) காலத்தில் கிரேக்க ஆட்சியாளர்களும், குடி மக்களும் பௌத்தத்தை பயின்றதால் கிரேக்க பௌத்தம் நன்கு வளர்ந்தது. பின்னர் ஆப்கானிஸ்தானையும், வடக்கு பாகிஸ்தானையும் கி.மு 180 முதல். கி.பி.10 வரை ஆண்ட இந்தோ கிரேக்கர்களும் பௌத்த சமயத்தை பேணி வளர்த்தனர்.

ஆப்கானிஸ்தானில் இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன், பௌத்தம் முக்கிய சமயமாக விளங்கியது. ஆப்கானிஸ்தானில் பௌத்த சமயம், தெற்கில் இந்துகுஷ் வரை பரவியிருந்தது. இப் பகுதியை ஆண்ட கிரேக்க செலூக்கியப் பேரரசு, மௌரியப் பேரரசுடன் கொண்டிருந்த நட்புறவால், கி.மு. 305 இல் ஆப்கானிஸ்தானில் பௌத்த சமயம் பரவியது.

குசான் பேரரசர் கனிஷ்கர் (கி.பி.127 - 163) ஆட்சிக்காலத்தில் பௌத்த சமயம் அதன் உச்சத்தை தொட்டது. பௌத்த இலக்கியங்கள், கிரேக்க எழுத்து முறையில் பாக்திரியா மொழியில் எழுதப்பட்டது. பௌத்தத்தை மத்திய ஆசியா, மேற்காசியா, திபெத் மற்றும் சீனாவில் பரப்ப பல பௌத்த அறிஞர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர்.

கிரேக்கப் பேரரசர் மெனாண்டர் ஆட்சியின் போது, காபூலிருந்து சுமார் 150 கி.மீ தொலைவில் உள்ள அலெக்சாண்டிரியா காக்கேசியா நகரத்திலிருந்து மகாதர் மரக்சிதர் தலைமையில் ஏறத்தாழ 30,000 பௌத்த பிக்குகள், இலங்கையின் அநுராதபுரத்தில் ருவான்வெலிசாய எனப்படும் பெரிய தூபியை நிறுவ வந்ததாக மகாவம்சம் கூறுகிறது.

கிரேக்க பாக்திரியப் பேரரசர் மிலிந்தர் எனும் மெனாண்டர் (கி.மு. 165 - 135) ஆட்சிக் காலத்தில் பௌத்த சமயத்தை பேணி வளர்த்தார் என்பதை நாகசேனர், பாளி மொழியில் எழுதிய மிலிந்த பன்ஹா எனும் பௌத்த நூல்மூலம் அறிய முடிகிறது. மத்திய ஆசியாவில் அமைந்த பாரசீக பௌத்த விகாரை, மத்திய ஆசியாவின் பௌத்த சமயத்தின் மையமாக விளங்கியது. ஆப்கானிஸ்தானில் இஸ்லாம் பரவும் வரை ஆப்கானிஸ்தானின் சிதியர்கள் மற்றும் பஷ்தூன் மக்கள் பௌத்த சமயத்தை பயின்றனர். வடக்கு ஆப்கானிஸ்தானின் பால்க் மாகாணத்தில் இருந்த நவ விகாரை பல நூற்றாண்டுகளாக, மத்திய ஆசியா பகுதிகளுக்கு, பௌத்த சாத்திரங்கள் பயிலும் மையமாக திகழ்ந்தது.

காந்தாரம் என்றும் வாஹ்லிகா என்றும் புராதன இந்து மற்றும் பௌத்த நூல்களில் குறிப்பிடப்படும் ஆப்கானிஸ்தான் இன்றைய பட்டாணியர்கள் அதன் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் வசிக்கும் இடமாக இருக்கிறது. இதில் தான் இந்து சைவர்களும் மஹாயானப் பிரிவைச் சேர்ந்த பௌத்தர்களும் இஸ்லாம் இங்கு வருவதற்கு முன்பு வாழ்ந்து வந்தனர். பின்னர் வலுக்கட்டாயமாக அனைவரும் இஸ்லாமுக்கு மாற்றப்பட்டனர்.


காந்தாரம் என்றும் வாஹ்லிகா என்றும் புராதன இந்து மற்றும் பௌத்த நூல்களில் குறிப்பிடப்படும் ஆப்கானிஸ்தான் இன்றைய பட்டாணியர்கள் அதன் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் வசிக்கும் இடமாக இருக்கிறது. இதில் தான் இந்து சைவர்களும் மஹாயானப் பிரிவைச் சேர்ந்த பௌத்தர்களும் இஸ்லாம் இங்கு வருவதற்கு முன்பு வாழ்ந்து வந்தனர். பின்னர் வலுக்கட்டாயமாக அனைவரும் இஸ்லாமுக்கு மாற்றப்பட்டனர்.

### ஆப்கானிஸ்தானில் பௌத்தச் சின்னங்கள்

தெற்கு ஆப்கானிஸ்தானின் லோகர் மாகாணத்தின் மெஸ் ஐநக் மலைப் பகுதியில் 2,120 மீற்றர் உயரத்தில் கட்டப்பட்ட தூபி பகுதியில் 42 பௌத்த தொல்லியல் நினைவுச் சின்னங்கள், ஒகஸ்ட், 2010இல் கண்டெடுக்கப்பட்டது. இவற்றில் சில கி.பி.இரண்டாம் நூற்றாண்டு காலத்தியவை ஆகும். தற்போது இங்குள்ள தூபியும் பௌத்த நினைவுச் சின்னங்களும் சிதைந்த நிலையில் உள்ளன. மேலும் மெஸ் ஐநாக் பகுதியில் இரண்டு பௌத்த தூபிகளும், கௌதம புத்தர் உருவச் சிலைகளும், வெள்ளி மற்றும் தங்க நாணயங்கள், நவரத்தினங்கள் மற் றும் சுதை ஓவியங்கள் கண்டெடுக் கப்பட்டன.

### காசுனியில் சில பௌத்த தொல்லியல் களங்கள் கண்டுபிடிக்கப்பட்டன

ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜலாலாபாத் நகரத்தின் மேற்கே 11 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பீமரன் தூபி சிதைந்த நிலையில் உள்ளது. இத்தொல்லியல்களம் (பீமரன் தூபிகளுக்கும்), அதனருகே அகழாய்வில் கண்டுபிடித்த தங்கத்தால் செய்த அழகிய பீமரன் பேழைக்கும் பெயர் பெற்றது. ஆப்கானிஸ்தானின் பாக்ராம் பகுதியில், கிபி முதலாம் நூற்றாண்டு காலத்திய கிரேக்கம் மற்றும் அரமேயம் மொழியில் எழுதப்பட்ட அசோகர் கல் வெட்டுக்கள், யானைத்தந்தத்தாலான அழகிய பெண் கள், குதிரை வீரன் சிற்பங்களும், மீன்வடிவில் செய்யப்பட்ட உலோக நீர் குவளையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன (படம் 1).



பாமியன் புத்தர் சிலைகள்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதவைப்...

ஆயிரம் பணத்தை வைப்பிலிடுமாறும் தொலைபேசி மூலம் சொல்லப்பட்டது. அதன் பின்னர் அதே தொலைபேசி இலக்கத்தில் இருந்து மீண்டும் அழைப்பு ஏற்படுத்தப்பட்டு தாம் குறிப்பிடும் நெல்லியடி மக்கள் வங்கியில் உள்ள கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிடுமாறும் அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து அவரும் குறித்த நபரின் கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிட்டுள்ளார். அதன்பின்னர் குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டபோது அந்த இலக்கம் செயலிழந்துள்ளது. இதனையடுத்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3.60)

## சிறுமிக்கு...

கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகர் குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் பொரித்த அப்பளத்தினை 5 வயது சிறுமி தாயாருக்கு தெரியாமல் எடுத்து சாப்பிட்ட காரணத்தினால் தாயார் பெற்ற குழந்தைக்கு வாய்ப் பகுதியில் நெருப்பால் சுட்டுள்ளார்.

இதனை அவதானித்த சிறுமியின் தாத்தா அக்கராயன் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய தாயார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமி கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தந்தை தொழிலுக்காக வெளியில் சென்றவேளை இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. (ம-3.316)

## கோப்பாயில்...

கைப்பற்றப்பட்டுள்ளன.

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 09/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1144
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 2 1 7 9 3 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 09/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0898
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
T 08 27 31 64 73

மஹஜன சம்பத
திகதி 2021/10/09
சீட்டிழுப்பு இலக்கம் 4550
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
L 0 9 5 0 7 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 09.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2845
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
W 19 60 77 80
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2021.10.09
சீட்டிழுப்பு இலக்கம் - 580
B 06 18 20 32
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

வீட்டிலிருந்தவர் குளியலறையில் இருந்தவேளை இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ம-3.33)

## வடமராட்சியில்...

டரை கடல் மைலுக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே குறித்த வலைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. (ம-3.60)

## குமாரதாஸ்...

**கொழும்பில் காலமான அவரது உடல் கொழும்பிலிருந்து அவரது நல்லூர் மாப்பாணர் வளவு இல்லத்துக்கு எடுத்து வரப்பட்டு மிக அமைதியான முறையில் அவரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும் எனக் குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.**

**இதேவேளை குமாரதாஸ் மாப்பாணரின் மறைவுக்கு ஆன்மிகத் தலைவர்கள், கல்விமான்கள் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் தமது இரங்கல் செய்தியை தெரிவித்துள்ளனர். (ம-3)**

## இன, மத...

குமாரதாஸ் மாப்பாண முதலியார் மறைவுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

இலங்கைத் திருநாட்டிலே சமய சகவாழ்விற்கு ஆதாரமாக இருக்கும் ஒரு கோவில் - நல்லூர்க் கந்தசுவாமி கோவில். இங்கு இன, மத பாகுபாடு பாராட்டப்பட்டு யாரும் கண்டதில்லை. இறைவன் சந்நிதியில் அனைவரும் ஒன்றே என்ற உண்மையை நாம் இங்கு காண முடியும். நம் தாய்த் திருநாட்டின் உலகறிந்த அடையாளம் இந்தப் பெருமை மிகு ஆலயம். அருள் ஒளி வீசும் அற்புத ஆலயம்.

நம் தேசத்திற்குப் பெருமை தரும் வகையில், உலகப்புகழ் பெற்ற நல்லைக் கந்தன் ஆலயத்தின் நிர்வாகத்தினைச் சிறப்புற முன்னெடுத்தவர் குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள். அவருக்குக் கந்தப்பெருமானின் அருட்கடாட்சம் எப்போதும் துணை நின்றது. அதுவே குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களைச் செயற்கரிய மிக்க அடியவனாக்கியது. அப்படிப்பட்ட மகோன்னத புருஷரின் இழப்பு, நம் அனைவருக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ராஜபக்ஷ...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சௌபாக்கியத்திற்கு பதிலாக அரசாங்கம் அசௌபாக்கியத்தை மாத்திரமே நாட்டுக்கு மீதம் வைத்துள்ளது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஒரு புறம் வேலை வாய்ப்பின்மை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தொழில் வாய்ப்புகள் இன்றி இளைஞர், யுவதிகள் கஷ்டத்தில் உள்ளனர். மறுபுறம் உழவர்கள் செய்வதறியாத நிலை

விற்பனையாளர் தேவை
யாழ். நகரில் இயங்கும் புடைவை நிறுவனத்திற்கு O/L, A/L படித்த புடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை.
சென்னை பெசன் வேல்ட்
இல. 63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

மைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

முழு நாட்டு மக்களும் வாழ்க்கை தொடர்பான பாரதூரமான பல நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளனர் என்றார். (ம-3)

## எரி...

உணவுகள், தேநீர், பால் தேநீர் போன்றவற்றின் விலைகளும் அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின்விலை சுமார் 20 வீதத்தினால் அதிகரிக்கப்படலாம் என உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனடிப்படையில் வெறும் தேநீர் 25 ரூபாய் வரையும் பால் தேநீர் 60 ரூபாயாகவும் பணிஸ் ஒன்றின் விலை 50 ரூபாயாகவும் ரோஸ் பாண் ஒன்றின் விலை 30 ரூபாயாகவும் அதிகரிக்கலாம் என உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-3)

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1353
சீட்டிழுப்பு திகதி: 09.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,629,638
வெற்றி இலக்கங்கள் 07 26 28 68 ஆங்கில எழுத்து T
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


சனிதா
சீட்டிழுப்பு இல: 3088
சீட்டிழுப்பு திகதி: 09.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,935,866.40
வெற்றி இலக்கங்கள் 20 47 65 67 ஆங்கில எழுத்து C

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,793,661/=
திகதி 09.10.2021
3239
வெற்றி இலக்கங்கள் 14 17 42 51 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,702,740/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1527
சீட்டிழுப்பு திகதி 09.10.2021
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
G 20 52 54 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் 65,188,049.20/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 449 திகதி 09.10.2021
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 38 45 61 விதி எண் 3
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 14,396,224
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் கந்தசுவாமி ஆலய எஜமானர்

## இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார்

அவர்கள் குகபதமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் எஜமானரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானை வேண்டி நிற்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கொனிக்கா கலர் லாப்

சிறி ராம் ஜீவல்லர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு உதவியாளர் தேவை

வீட்டில் தங்கி இருந்து வீட்டு உதவிகள் செய்யக்கூடிய மற்றும் இரண்டு வயதுக் குழந்தையைப் பராமரிக்கக் கூடிய வீட்டு பணிப்பெண் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.)
(8203)

☎ - 077 700 2552

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- ❖ Guaranteed to 7.5 in IELTS Exam.
- ❖ Pass in UK $A_1$ Exam.
- ❖ Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.
**OXFORD ENGLISH ACADEMY,**
**Ariyakulam junction, Jaffna.**
(8169)

TP : 077 780 3970, 074 007 1970

## பொதுக்கூட்ட அறிவித்தல்
### இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வடமாகாணம்

மேற்படி எமது தொழிற்சங்கத்தின் நிர்வாகசபை தெரிவிற்கான பொதுக்கூட்டமானது எதிர்வரும் 30.10.2021 (சனிக்கிழமை) மு.ப 9.00 மணியளவில் K.S.S வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சி கல்யாண (நாச்சிமார் கோவில்) மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே குறித்த கூட்டத்திற்கு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் சந்தாப்பணம் ஆறு மாதங்களுக்கு மேல் தொடர்ந்து செலுத்தாதவர்களும் புதிதாக இணைய விரும்புவர்களும் தமது சந்தா பணத்தினை எமது இலங்கை வங்கியின் **83416543** என்ற கணக்கிலத்திற்கு வைப்பிட்டு வைப்புத்துண்டுப் பிரதியுடன் வருகைதருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகவே இடம்பெறும்.

செயலாளர் (8196)

## மாபிள் பதித்தல்

தரமான முறையில் மாபிள் வேலை செய்து தரப்படும்.

**A. ஜீவா**
(C-2793)

077 187 6805

## அமெரிக்க லொத்தர் விசா



2023ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

விரையுங்கள் பதிவுகள் ஆரம்பாகிவிட்டன (C-2791) ☎ 0768226244

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

எம்மூடாக வீசா வென்றவர்களின் விபரங்களை எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

**V2 Travels** www.facebook.com/v2tandt

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் **குரு ஹாட்வெயார்** நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

**ஆண்கள் மட்டும்**

கிளிநொச்சி கரடிபோக்கு சந்தியில் இருந்து 10 Km சுற்றாடலில் வசிப்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

01. கணக்குப் பதிவாளர்
02. கணக்கு உதவியாளர்
03. ஹாட்வெயார் பணியாளர்
04. மாபிள்கடை பணியாளர்
05. விற்பனைப் பிரதிநிதி

தகுதியுடையோர் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.
சம்பளம் கவர்ச்சிகரமாக வழங்கப்படும்.
கிழமை நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை. நேரில் சமுகமளிக்கவும்.
(C-2778)

தொ. இல : 077 743 5265

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1976 ஆம் ஆண்டு, உத்திர நட்சத்திரம், 37 கிரக பாவம் உள்ள ஆசிரிய மணமகனுக்கு மணமகள் தேவை.
(8173)

077 538 6405

## தோட்டம் விற்பனைக்கு

45 பரப்பு தோட்டம் நவற்கிரி
புத்தூர் வீதியில் நவற்கிரியில் விற்பனைக்கு உண்டு.
விலை விபரம் நேரடியில் மட்டும்.
(8159)

077 706 6487 யாழ்ப்பாணம்

## சிங்களம் பேசலாம் வாருங்கள்

எழுத, பேச, வாசிக்க (குறுகிய காலத்தில்) உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும். மாணவர்கள், அரச, தனியார் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும்.
(8200)

077 345 0645

## வீடு வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் 10 அறைகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு.
( நிறுவனாங்களிற்கு உகந்தது )
(8195)

076 675 7518

## காணிகள் தேவை

கிளிநொச்சி, பளை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து 10 ஏக்கர் - 250 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் அவசரமாக விலைக்குத் தேவை. உடன் விலை கொடுத்து வாங்குவோம். காணிகளும் விற்பனைக்கு உண்டு.
(8162)

077 346 0492, 074 037 1960
077 653 1980

## வீடு வாடகைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் இலங்கை வங்கிக்கு எதிராக வீடு வாடகைக்கு உண்டு.
( அலுவலகமாக அல்லது களஞ்சியமாக உபயோகிக்கலாம்)
(8186)

077 280 0017

# குகமயம் அடைந்த அறிவித்தல்

## இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார்

நல்லூரைச் சேர்ந்த இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் நேற்று (09.10.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சுகிர்தாதேவி குமாரதாஸின் அன்புக் கணவரும் ஷமித்ரா ரமணன், ஷஞ்சுத்தா ராமச்சந்திரன், குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமணன் ராமசந்திரன், பேராசிரியர் (டாக்டர்) சுதர்சன் ராமசந்திரன், (டாக்டர்) மிர்ணா குமாரதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷர்மதா, ஷ்ரண்யா, (டாக்டர்) ஷனாத், (டாக்டர்) பிரவினாத், ஹரிஷ்நாத், ஷமாயா, சுவாராயா, குமரேஷ் அனிஷ்வரா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் அவரது விருப்பப்படி அமைதியாக, குடும்ப நிகழ்வாக அவரது "மாப்பாணர் வளவு" இல்லம் நல்லூரில் இன்று (10.10.2021) ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும்.

நல்லூர்

தகவல்:-
குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் வீடு வாடகைக்கு உண்டு.
( அரச, தனியார் கம்பனிகளில் வேலை செய்பவர்கள், சிறிய குடும்பத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

தொடர்புகளுக்கு
077 315 1326

## VACANCY
### Receptionist cum Administrator

ஆங்கிலம் சரளமாக பேசத் தெரிந்த MS Office, Coreldraw/ Photoshop தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சுன்னாகம் பிரதேசத்தை அண்டியோர் விரும்பத்தக்கது. பின்வரும் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும். **kcnanthini7@gmail.com**
(8204)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2789)

☎ 0768226240 DHL

## IMMEDIATE VACANCY
### Administrative Assistant



**Duties**
- Assisting Visa Applications
- Air Ticketing
- Office Administration

Requirements (C-2790)
- ✓ Fluent in English
- ✓ Relevant Experience
- ✓ Able to Handle Multiple Tasks Under Pressure Situations

Salary- 30'000/=

**CIMS COLLEGE** ☎ 0777068777
49A, Chappel lane, Jaffna ( near Jaffna Central college)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.